விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26

ஒலி 203 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 26 வியாழக்கிழமை (10.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829







## செம்மணியில் 23 நாள் அகழ்வு
## 64 எலும்புக்கூடுகள் அடையாளம்

### நேற்றும் 7 என்புத் தொகுதி மீட்பு



(யாழ்ப்பாணம்)

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியின் அகழ்வு நடவடிக்கை நேற்று 14ஆவது நாளாக இடம்பெற்றது.

இதன்போது ஏழு என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி சித்துப்பாத்தி 15ஆம் பக்கம் பார்க்க

## நயினை நாகபூசணித் தாய்
### நேற்று தேரில் வலம் வந்த காட்சி...



### செம்மணி மனிதப் புதைகுழி
## விசேட பொலிஸ் குழுவின் அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும்
### அரசாங்கம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் விசேட பொலிஸ் குழுவின் அறிக்கை நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அவற்றின் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. 15ஆம் பக்கம் பார்க்க

## ராஜபக்ஷக்களின் அரசியலுக்காகவே
## ஈஸ்டர் தாக்குதல் அரங்கேற்றப்பட்டது
### பாராளுமன்றில் அமைச்சர் பிமல் பகிரங்கம்



(கொழும்பு)

அதிகாரத்தை இழந்த ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சிப் பீடம் ஏறுவதற்கு ஏதுவான சூழ்நிலையை உருவாக்கவே திட்டமிட்டு ஏப்ரல் 21 ஈஸ்டர் தாக்குதல் அரங்கேற்றப்பட்டது என அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்று பாராளுமன்றில் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார். (15ஆம் பக்கம் பார்க்க)

## விமல் வீரவன்ஸ
## சி.ஐ.டியில் முன்னிலை

(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ நேற்றுக் காலை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகினார்.

கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் சர்ச்சைக்குரிய 323 கொள்கலன்கள் விடுவிப்புத் தொடர்பில் 15ஆம் பக்கம் பார்க்க

## ஈஸ்டர் குண்டுத் தாக்குதலை பிள்ளையான் அறிந்திருந்தார்
### அமைச்சர் ஆனந்த விஜேபால அதிர்ச்சித் தகவல்



(கொழும்பு)

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் அப்போது சிறையிலிருந்த பிள்ளையான் என்ற சிவநேசதுரை சந்திரகாந்தன் அறிந்திருந்தார் எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர், 16ஆம் பக்கம் பார்க்க

## புதுக்குடியிருப்பில் புலிகளின் பதுங்குகுழிக்குள் ஆயுதங்கள்!
### அகழ்வுப் பணிக்கு ஏற்பாடு

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு மந்துவில் பகுதியில் விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் இருப்பதாகச் சந்தேகிக்கப்படும் தனியார் காணியொன்றில் அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பதற்கான துப்புரவுப் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.பி.ஆர்.ஹேரத் தலைமையிலான பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததற்கு 15ஆம் பக்கம் பார்க்க

## கொக்குவிலில் வீடு புகுந்து தாக்குதல்
### மூவர் காயம்

(கொக்குவில்)

யாழ்ப்பாணம் - கொக்குவில் கிழக்குப் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் அத்துமீறி நுழைந்த 15 பேர் கொண்ட குழுவினரால் மேற் 15ஆம் பக்கம் பார்க்க

## ஆணொருவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பூங்காவிலிருந்து ஆணொருவர் சடலமாக நேற்று மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் யாழ்.நகரப் பகுதியைச் சேர்ந்த 15ஆம் பக்கம் பார்க்க

## கும்பாபிஷேகத்தில் நகை திருட்டு
### நான்கு பெண்கள் கைது

(யாழ்ப்பாணம்)

ஆலயகும்பாபிஷேகத்தில் தங்க நகைகளைக் களவாடிய குற்றச்சாட்டில் கைதான நான்கு பெண்களையும் விளக்கமறியலில் 02ஆம் பக்கம் பார்க்க

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செம்மணி விவகாரத்துக்கு சர்வதேச விசாரணை அவசியம்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எடுத்துரைப்பு

(கொழும்பு)

செம்மணி மனிதப்புதை குழி தொடர்பில் பாராளுமன்றில் கருத்துரைத்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நீதியை நிலைநாட்டுவதற்கு சர்வதேச விசாரணையே அவசியமாகவுள்ளதென வலியுறுத்தினார்.


பல வருடங்களாக விசாரணை உள்ளிட்ட அரச செயற்பாடுகளில் அரசியல் தலையீடு காணப்படுகின்றமை அனைவரும் அறிந்ததே. இந்த விடயங்களில் அரச தரப்பின் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இந்தநிலையில், குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்ற தரப்பினரே, எவ்வாறு? தமக்கு எதிராக விசாரணைகளை முன்னெடுக்க முடியும் என்று அவர் கேள்வி எழுப்பினார்.

இவ்வாறான விடயங்களில் அரச நிறுவனங்கள் இதுவரையில் சுயாதீனமாக இயங்கியதில்லை.

எனவே, செம்மணி விவகாரத்துக்கு இலங்கைக்குள் விசாரணைகளை நடத்தி தீர்வை பெற முடியும் என்று அரசாங்கம் நினைக்குமாயின், அது கனவாகவே அமையும் என்று பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். (ந-7)

# நவாலி தேவாலயத் தாக்குதல் 30 ஆம் ஆண்டு நினைவுகூரல்



(நவாலி)

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான விமானத் தாக்குதலின் 30ஆம் ஆண்டு நினைவுதினம் நேற்று புதன் கிழமை மாலை சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் நினைவு கூரப்பட்டது.

சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் பங்குத்தந்தை தலைமையில் வழிபாடுகள் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் மலர் தூவி சுடரேற்றி உயிரிழந்தவர்களுக்கு உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தினர்.

1995ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09 திகதியன்று நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும் நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்திலும் இடம்பெயர்ந்து தங்கியிருந்த மக்கள் மீது விமானப்படையினரின் மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை வீசியதில் 135ற்கும் மேற்பட்டோர் பலியாகியமை குறிப்பிடத்தக்கது. (ந-7,104)

# மருத்துவர் ஜமுனானந்தா கொழும்புக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.ஜமுனானந்தா கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (ந-7)

# நல்லூர் பிரதேசசபை கொக்குவில் உபஅலுவலக ஆதனப் பெயர்மாற்றம் வரியிறுப்பாளரின் பெயரை ஆதனப்பதிவேட்டில் உட்புகுத்தல்

நல்லூர் பிரதேசசபையின் கொக்குவில் உபஅலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம்- 06, நடராசா வீதி, ஆதன இல 40/2 எனும் ஆதனமானது முருகேசு ஐயாத்துரை எனவும் தற்போதைய உரிமையாளர் நடராசா பெண் விக்னேஸ்வரி என்ற விபரத்தில் காணப்படுகின்றது. குறித்த ஆதனத்தை திரு.திருமதி.தர்மலிங்கம் சாந்தபாலன் பெண் தர்சிகாவும் தங்களது பெயரை ஆதனப் பதிவேட்டில் வரியிறுப்பாளர்களாக பதிவு மேற்கொள்ள விண்ணப்பித்துள்ளார்.

1. விண்ணப்பதாரி பிரசித்த நொத்தாரிசு திருமதி S.சிவபாதம் அவர்கள் முகதாவில் 6198 ஆம் இலக்கத்தில் 14.11.2012 ஆம் திகதிய அறுதி உறுதியின் படியும் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் K.நவரத்தினம் அவர்களினால் 1123 ஆம் இலக்கத்தில் 11.09.2012 ஆம் திகதி அளந்து வரைந்த படத்தின்படி 1ம் துண்டான நில பரப்பு 02 குளி 17.34 ஆகும்.
2. விண்ணப்பதாரியின் உறுதியின் ஆதன அட்டவணைப்படியும் நில அளவைப் படத்தின் படியும் எல்லைகள் கிழக்கு - 02ம் துண்டாக காட்டப்பட்ட ஆதனம் வடக்கு - பன்னிரண்டு அடிப்பாதை நிலம் மேற்கு ஒழுங்கை தெற்கு - முருகேசு ஐயாத்துரைக்கும் பெண் புவனேஸ்வரிக்கும், அகிலன் பெண் கீர்த்திகாவுக்கும் உரிய ஆதனங்கள் என்ற விபரங்களில் காணப்படுகின்றது.
3. விண்ணப்பதாரியினால் சமர்பிக்கப்பட்ட ஆவணங்களின் ஆரம்ப உறுதியானது பிரசித்த நொத்தாரிசு ரட்ணம் ரகுராஜா அவர்கள் முகதாவில் 3294ம் இலக்கத்தில் 2011.02.23ம் திகதியன்று நிறைவேற்றப்பட்ட உறுதி வெளிப்படுத்தல் சாதனமாகும்.
4. விபரங்களடங்கிய ஆதனத்தை ஆதனப்பதிவேட்டில் வரியிறுப்பாளராக பதிவு மேற்கொள்ள நல்லூர் பிரதேச சபைக்கு வெளிப்படைத்தன்மை அவசியமாகும். அதன்பிரகாரமும் சட்ட ஆலோசகரின் பரிந்துரையின் பிரகாரமும் குறித்த ஆதனத்தை ஆதனப்பதிவேட்டில் திரு.திருமதி.தர்மலிங்கம் சாந்தபாலன் பெண் தர்சிகாவும் என்பவர்களை வரியிறுப்பாளர்களாக பதிவு மேற்கொள்ளும் பொருட்டு பத்திரிகையில் செய்தியாக பிரசுரிக்கப்படுகின்றது.
5. இவ்வாதனம் வெளிப்படுத்தல் சாதனமாக காணப்படுவதாலும் குறித்த செயற்பாடுகளானவை சட்டபூர்வமான வெளிப்படைத்தன்மை கொண்டதும் பொறுப்பு வாய்ந்த செயற்பாடாக காணப்படுவதாலும் ஆதனபெயர்மாற்று விண்ணப்பதாரரின் கோரிக்கைக்கமைவாகவும் இவ்வாதனம் தொடர்பான விபரங்கள் யாழ் குடாவிலிருந்து வெளிவரும் பத்திரிகையில் செய்தியாக பிரசுரிக்கப்படுகின்றது.

குறித்த ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனைகள் ஏதும் தெரிவிப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ, வெளிநாட்டில் வசிப்பவர்களாயிருந்தால் இங்குள்ள உறவினர் மூலமாகவோ ஆட்சேபனைகளை தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனைகள் தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரர் திரு.திருமதி.தர்மலிங்கம் சாந்தபாலன் பெண் தர்சிகாவும் என்பவரின் பெயருக்கு ஆதனப் பெயர் மாற்றம் செய்வதனால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் நல்லூர் பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம். (சட்டபூர்வமான ஆவணங்களைச் சமர்ப்பிக்காத அனைத்து முறைப்பாடுகளையும் நிராகரிக்கும் அதிகாரம் நல்லூர் பிரதேச சபைக்கு உண்டு என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்)

தவிசாளர்

(C-3378)

# கும்பாபிஷேகத்தில்...

திருநெல்வேலிப் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் கடந்த திங்கட் கிழமை மகா கும்பாபிஷேகம் இடம் பெற்றது. அதன்போது ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டிருந்தனர். அவ்வேளை தாலிக்கொடி ஒன்று உள்ளிட்ட ஐவரின் தங்கநகைகள் களவாடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் தகவல் அறிந்த கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு, சந்தேகத்திற்கு இடமான முறையில் ஆலயச் சூழலில் நடமாடிய வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த நான்கு பெண்களைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், அவர்களை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ். நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியவேளை விளக்கமறியலில் தடுத்து வைக்குமாறு மன்று உத்தரவிட்டது. (ந-7)

வைக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

பல ஆயிரம் கடந்த பதிவுகள்...

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்



உங்கள் கல்யாண மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)

உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள

www.kalyanamalai.lk

இணையத்தளத்தைப் பாருங்கள்

பதிவுக்கட்டணம் : 4000/= மட்டும்



தொடர்பு – கல்யாணமாலை



இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.


T.P : 021 720 1005

076 097 3120

Email : Kalyanamalai.jaffna@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத் தேர்த் திருவிழா நேற்று புதன்கிழமை பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் மத்தியில் பக்திபூர்வமாக இடம் பெற்றது.**

**(படங்கள்- சிவசாந்தன்,கஜிந்தன்)**

# பகிடிவதைத் தடுப்பு வழிகாட்டல்களை

# அமுல்படுத்துமாறு உயர்நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)..............................

**பல்கலைக்கழகங்களில் பகிடிவதைச் சம்பவங்களை தடுக்க தற்போது நடைமுறையில் உள்ள வழிகாட்டுதல்களின் தொகுப்பை அவசியம் அமுல்படுத்துமாறு உயர் நீதிமன்றம் நேற்று பல்கலைக்கழக மானிய ஆணையத்திற்கு உத்தரவிட்டது.**

அந்த வழிகாட்டுதல்களை திறம்பட செயற்படுத்த தேவையான நிதி, தொழில்நுட்ப ஆதரவு மற்றும் வசதிகளை வழங்குமாறு கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சருக்கு நீதிபதிகள் குழு உத்தரவிட்டது.

ஷிரான் குணரத்ன, பிரியந்த பெர்னாண்டோ மற்றும் சோபித ராஜகருணா ஆகியோர் அடங்கிய மூன்று நீதிபதிகள் கொண்ட குழு இந்த நீதிமன்ற உத்தரவை பிறப்பித்தது.

இந்த உத்தரவுகளை செயற்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை மறு பரிசீலனை செய்ய வழக்கை 2026 ஜனவரி 14 ஆம் திகதி மீண்டும் விசாரிக்க நீதிபதிகள் மேலும் உத்தரவிட்டனர். (நி)

## பாராளுமன்ற உறுப்பினராக நிஷாந்த ஜயவீர பதவியேற்பு

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தியின் யூ.டி நிஷாந்த ஜயவீர நேற்றுக் காலை பாராளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றுள்ளார்.

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன முன்னிலையில் அவர் பதவி ஏற்றுக்கொண்டார். கலாநிதி ஹர்ஷன சூரியப் பெருமவின் இராஜினாமாவைத் தொடர்ந்து வெற்றிடமான தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு யு.டி. நிஷாந்த ஜயவீரவின் பெயர் சமீபத்தில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# வாகன விலைகள் மீண்டும் உயரலாம்

## வாகன இறக்குமதியாளர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

வாகன இறக்குமதிக்காக ஒதுக்கப்பட்ட மீதமுள்ள 200 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் ஏதேனும் நிபந்தனைகளை விதித்தால், உள்ளூர் வாகனச் சந்தை கடுமையான விலை உயர்வைச் சந்திக்க நேரிடும் என்று இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகே எச்சரித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் மேலும் உரையாற்றிய அவர்,

மத்திய வங்கியின் அண்மைய அறிக்கைகளின்படி, நிதி நிறுவனங்கள் ஏற்கனவே வாகன இறக்குமதிக்காகக் கிட்டத்தட்ட 800 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள கடன் கடிதங்களைத் திறந்துள்ளது.

இறக்குமதியை மீண்டும் தொடங்குவதற்கு ஆரம்பத்தில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும், மீதமுள்ள நிதியைக் கையாள்வது இப்போது நிச்சயமற்றதாகவே உள்ளது.

மீதமுள்ள 200 மில்லியன் அமெரிக்க டொலர் திட்டமிட்டபடி இறக்குமதிக்கு கிடைக்குமா அல்லது புதிய நிபந்தனைகள் விதிக்கப்படுமா என்பதை தெளிவுபடுத்த விரைவில் அரசு அதிகாரிகளுடன் கலந்துரையாடுவோம் என்று நம்புகிறோம்.

நிபந்தனைகள் விதிக்கப்பட்டால், சந்தை தேவை மற்றும் விநியோகத்தைப் பொறுத்து உள்ளூர் வாகன விலைகள் தவிர்க்க முடியாமல் மீண்டும் உயரும்.

தற்போதைய பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக குறைந்தது 9,000 வாகனங்கள் ஏற்கனவே நாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (நி)

# சிறைச்சாலைகளில் அதிகரிக்கும் கைதிகளின் எண்ணிக்கை

(கொழும்பு)

நாட்டின் சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களப் பேச்சாளர் ஜகத் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்படக்கூடிய கைதிகளின் எண்ணிக்கை 12 ஆயிரம் எனவும் தற்பொழுது மொத்தம் 33 ஆயிரம் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 37 ஆண்டுகளாக சிறைச்சாலைகள் திணைக்களத்தில் கடமையாற்றி வருவதாகவும் அண்மைக் காலமாக கைதிகளின் எண்ணிக்கை வெகுவாக உயர்வடைந்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தனது சேவைக் காலத்தில் சிறுவர்கள், முதியவர்கள், ஆண்கள்,பெண்கள், இளைஞர்கள் உள்ளிட்ட பலரும் குற்றச் செயல்களில் ஈடுபட்டு சிறையில் தண்டனை அனுபவித்து வருவதனைப் பார்த்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சிறையில் அடைக்கப்படுவதனால் உளவியல் பாதிப்புக்களினாலும் குடும்பப் பிரச்சினைகளினாலும் கைதிகள் பாதிக்கப்படுவதனை தாம் நேரில் அவதானித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

### பங்களாதேஷுக்கு எதிரான ஒருநாள் தொடர்

## எட்டு ஆண்டுகளின் பின்னர் தொடரைக் கைப்பற்றியது இலங்கை



நீண்ட இடைவெளிக்கு பின்னர் இலங்கை கிரிக்கெட் அணி, பங்களாதேஷ் அணிக்கு எதிராக சாதனை வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

சுமார் எட்டு ஆண்டுகளின் பின்னர் இலங்கை அணி, பங்களாதேஷ் அணியை சர்வதேச ஒருநாள் போட்டித் தொடரில் வெற்றியீட்டியுள்ளது.


கண்டி பல்லேகலே மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் இலங்கை அணி 99 ஓட்டங்களினால் பங்களாதேஷ் அணியை வீழ்த்தியுள்ளது.

நாணய சுழற்சியில் வெற்றியீட்டிய இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி களமிறங்கிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கட் இழப்பிற்கு 285 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 39.4 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 186 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது.

இதன்படி மூன்று போட்டிகள் கொண்ட தொடரை 2:1 என்ற அடிப்படையில் இலங்கை அணி தொடரைக் கைப்பற்றியுள்ளது. (3)

## உலக சாதனை படைத்த கென்ய வீராங்கனை




அமெரிக்காவின் யுஜின் நகரில் ப்ரீஃபோன்டைன் கிளாசிக் தடகளப் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் மகளிருக்கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் கென்யாவின் பீட்ரைஸ் பந்தய தூரத்தை 13 நிமிடங்கள் 58.06 விநாடிகளில் கடந்து உலக சாதனையுடன் முதலிடம் பிடித்து அசத்தினார்.

இதற்கு முன்னர் எத்தியோப்பியன் குடாஃப் செகே 14 நிமிடங்கள் 00.21 விநாடிகளில் பந்தயத் தூரத்தை கடந்ததே சாதனையாக இருந்தது. இதை முறியடித்து புதிய சாதனை படைத்துள்ளார் பீட்ரைஸ். (3)

## டெஸ்டில் ஓய்வு பெற்றது ஏன்? மனம் திறந்தார் கோலி



சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து விரைவிலேயே ஓய்வு பெற்றது ஏன்? என்பது பற்றி 2 மாதங்களுக்குப் பின் மனம் திறந்திருக்கிறார் விராட் கோலி.

இந்திய அணியின் நட்சத்திர வீரரும், முன்னாள் கப்டனுமான விராட் கோலி, கடந்த மே மாதம் 12 ஆம் திகதி சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்து ரசிகர்கள் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கினார்.

கப்டனான ரோஹித் சர்மா ஓய்வை அறிவித்த ஒரே வாரத்தில் விராட் கோலியும் ஓய்வை அறிவித்தது ரசிகர்கள் மட்டுமின்றி, கிரிக்கெட் வட்டாரத்தில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியது.

ரி-20 போட்டிகளிலும் ஓய்வை அறிவித்துவிட்ட விராட் கோலி, ஒருநாள் போட்டிகளில் மட்டும் விளையாடி வருகிறார்.

36 வயதான விராட் கோலி சர்வதேச போட்டிகளில் 100 சதத்தையும், டெஸ்ட் போட்டிகளில் 10,000 ரன்களையும் எட்டுவார் என எதிர்பார்த்திருந்த நிலையில், அவரின் திடீர் ஓய்வு அறிவிப்பு ரசிகர்களுக்கு ஏமாற்றமாக அமைந்தது.

இந்த நிலையில், டெஸ்ட்டில் இருந்து ஓய்வு பெற்றது ஏன்? என்பது குறித்து தற்போது மனம் திறந்திருக்கிறார் விராட் கோலி.

மும்பையில் நடைபெற்ற இந்திய அணியின் முன்னாள் வீரர் யுவராஜ் சிங்கின் அறக்கட்டளையான யுவீகேன் (YouWeCan) தொடக்க விழாவில் விராட் கோலியும் கலந்து கொண்டார்.

அப்போது நிகழ்ச்சித் தொகுப்பாளரான கௌரவ், விராட் கோலியை மேடைக்கு அழைத்தார். அவரிடம், "டெஸ்ட் ஓய்வுக்கான காரணத்தை எப்போது கூறுவீர்கள். கிரிக்கெட் களத்தில் ரசிகர்கள் உங்களை மிஸ் செய்கிறார்கள்" எனக் கேட்டார்.

அதற்கு பதிலளித்து விராட் கோலி பேசும் போது, "இரண்டு நாட்களுக்கு முன்னதாகத் தான் என்னுடைய தாடிக்கு டை அடித்தேன். 4 நாட்களுக்கு ஒரு முறை உங்களின் தாடிக்கு டை அடிக்கிறீர்கள் என்றால், நீங்கள் ஓய்வு பெற வேண்டிய தருணம் வந்து விட்டது என்று அர்த்தம்!" எனத் தெரிவித்தார்.(3)

## சர்வதேச செஸ் போட்டியில் குகேஷ் மூன்றாமிடம்



2025 ஆம் ஆண்டுக்கான கிரேண்ட் செஸ் தொடரின், சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் குகேஷ் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

குரோஷியாவின் தலைநகரில் இடம்பெற்ற இந்தப் போட்டியில், நோர்வேயின் முதல்தர வீரர் மாக்னஸ் கார்ல்சென் மற்றும் உலக சம்பியன் குகேஷ் உள்ளிட்ட 10 பேர் கலந்து கொண்டனர்.


இறுதியில், நோர்வேயின் மாக்னஸ் கார்ல்சென் 22.5 புள்ளிகளுடன் சம்பியனானார். அமெரிக்காவின் வெஸ்லே 20 புள்ளிகளுடன், 2 ஆவது இடத்தையும், இந்தியாவின் குகேஷ் 19.5 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்தையும் பெற்றனர். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் பிரித்தானியா!

(லண்டன்)

**செம்மணி மனித புதைகுழி விவகாரம் தொடர்பில் பிரித்தானியா, ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாகவும் இது தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் கலந்துரையாடி வருவதாக பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் டேவிட் லாமி தெரிவித்துள்ளார்.**



வெளிவிவகார குழுக் கூட்டத்தில், பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் உமா குமரன், செம்மணி மனித புதைகுழிகள் குறித்து எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில், அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்துடன் இந்த விடயம் குறித்து நேரடி பேச்சுவார்த்தைகளை பிரித்தானியா மேற்கொண்டுள்ளது.

கடந்த மாதமும் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் பல பகுதிகளில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்களுடன் நெருக்கமான தொடர்பினை பேணி வருவதாகவும் டேவிட் லாமி தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுடைய குரல்கள் செவிமடுக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, அரச சார்பற்ற அமைப்புகள் உட்பட ஏனைய தரப்புகளுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றோம்.

செம்மணி பகுதியில் சரியான முறையில் அகழ்வு பணிகளை மேற்கொள்வதற்கான தொழில்நுட்ப ஆதரவை வழங்குவது தொடர்பில் ஆராய்ந்து வருவதாகவும் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பான ரோம் உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திடவில்லை.

இதன் காரணமாக, இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கான சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு மட்டுப்படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

## நீதிகோரும் நடைபயணம்

(யாழ்ப்பாணம்)

வல்லமை சமூக மாற்றத்திற்கான போராட்ட இயக்கம் நடத்தும் அனைத்து வன்முறைகளுக்கும் படுகொலைகளுக்குமான நீதி கோரும் பயணம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இக் கவனயீர்ப்பு நடைபயணமானது கல்வியங்காட்டுச் சந்தியில் தொடங்கி ஏ9 வீதி, யாழ் வரவேற்பு வளைவு வரையாக இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி, ஜெயந்திநகர், மகாதேவ ஆச்சிரமத்தில் 13.07.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெறும்.

சகல அங்கத்தவர்களும் மெய்யன்பர்களும் பங்குபற்றுமாறு அறங்காவலர், நிர்வாக உறுப்பினர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (நி)



கிளிநொச்சி மாவட்டத்தின் பிரமந்தனாறு நாதன் குடியிருப்பு பகுதியில் அமைந்து அடியார்களுக்கு அருள் பாலித்து வரும் சித்தி விநாயகர் ஆலயத்தில் நேற்றைய தினம் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரைத் தேர் முதல் முதலாக ஊர் கூடி வடம்பிடித்து தேர் இழுத்து தமது நேர்த்திக் கடனை செலுத்தினர். (படம்:தேவானந்தன்)

# இந்திய துணைத்தூதுவரைச் சந்தித்த கால்நடை வளர்ப்போர் கூ.ச.சமாசம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினர் இந்தியத் துணைத் தூதுவர் சாய்முரளியை சந்தித்து கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சந்திப்பில் பால் உற்பத்தியை அதிகரிப்பது, சந்தைப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்ட போது இந்தியாவிலுள்ள ஆவின் நிறுவனம், அமுல் நிறுவனங்களின் ஆலோசனைகளைப் பெற்றுத் தருவதுடன் பால் பதனிடும் உபகரணங்கள் பெற்றுத் தருவதாகவும் இந்தியத் துணைத்தூதுவர் குறிப்பிட்டார். (நி)

# இராசிபலன்

10.07.2025
ஆனி 26, வியாழக்கிழமை
பூரணை பின்னிரவு 2.55 மணிவரை

மூலம் காலை 6.00 மணிவரை
சுபநேரம் 7.28-8.58 மணிவரை
இராகுகாலம் 1.28-2.58 மணிவரை

பூரணை விரதம்
சந்திராஷ்டமம்- மிருகசீரிடம்

வளவன்




நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், உடல் நலன் சீராக்கி உற்சாகம் தோன்றும், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம்.




வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், உறவினர்கள் சந்திப்பால் உற்சாகம் கூடும், பொது வாழ்வில் சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.




நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, உடன் பிறந்தவர்கள் வழியில் உற்சாகம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு.




ஊர் மாற்றம் இட மாற்றம் என்பன இடம் பெறலாம், இறைவழிபாட்டு சிந்தனை மேலோங்கும் நாள், சுப காரிய செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.




உறவினர்கள் நண்பர்களுடன் பேசும் போது நிதானம் தேவை, தேவையற்ற விரயங்கள் மேலோங்கும் நாள், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், ரோக பயமுண்டு.




அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பிள்ளைகள் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.




உங்களின் வார்த்தைக்கு மதிப்புக் கிடைக்கும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாயப்புண்டு, பணபுழக்கம் கூடும்.




நண்பர்களின் ஒத்துழைப்போடு நல்ல காரியம் ஒன்றைச் செய்து முடிப்பீர்கள், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்




சடங்கு சம்பிரதாயங்களில் நம்பிக்கை கூடும், அலங்காரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், போசன சுகமுண்டு.




சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பெற்றோர்கள் மீது பிரியம் கூடும், சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழ்வீர்கள், பயணங்களால் பலனுண்டு.




எதிர்பாராத காரியமொன்று நடை பெறும் வாய்ப்புண்டு, சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், கற்பனை மிகுதியான நாள், பிறர் உதவியுண்டு.




வங்கிச் சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வந்து சேரலாம், போசன நன்மையுண்டு.

உழைப்பால் உடல் நலமும் உடலுழைப்பால் உள்ள நிறைவும் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளை ஈ தாக்கம் கட்டுப்படுத்தும் செயற்றிட்டம்
# அடுத்த வாரம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

**தென்னை மரங்களில் வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்தும் துரித நடவடிக்கை எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தெரிவித்தார்.**

தென்னை மரங்களில் வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்தல் தொடர்பான விசேட கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நேற்றுக் காலை 09.30 மணிக்கு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் தலைவர் கலாநிதி சுனிமல் ஜெயக்கொடி அண்மையில் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வருகை தந்து விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டதற்கு அமைய, தென்னை மரங்களில் வெள்ளை ஈ தாக்கத்தினைக் கட்டுப்படுத்த 200 விசேட தெளிகருவிகளைப் பயன்படுத்தி தென்னை மரங்களை தண்ணீர் மூலம் சுத்தப்படுத்தும் திட்டமானது எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் இரு வாரங்களுக்கு வெள்ளை ஈ தாக்கம் அதிகமாக இனங்காணப்பட்ட சாவகச்சேரி, கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம் மற்றும் உடுவில் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்கள் சிறப்பான ஒருங்கிணைப்பினை தென்னைப் பயிர்ச்செய்கை சபைக்கு வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

மேலும் ஏனைய பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் முதற்கட்ட செயற்றிட்டத்தின் பின்னர் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அரசாங்க அதிபரால் தெரிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை சாவகச்சேரியிலும், 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் கோப்பாயிலும், 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் உடுவிலிலும், 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் நல்லூரிலும் மற்றும் 25 ஆம் திகதி யாழ்ப்பாண பிரதேசத்திலும் 200 தெளிகருவிகள் மூலம் தென்னை மரங்களை கழுவும் செயற்பாடுகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (நி-104)

## முகாமைத்துவ கற்கைகள் சிறப்புமானி பட்டத்திற்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் முகாமைத்துவ கற்கைகள் சிறப்புமாணிப் பட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் க.பொ.த உயர்தர பரீட்சையில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அல்லது இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படும் ஏதேனும் அடிப்படை கற்கை நெறியில் 60 திறமை மட்டத்தினை பூர்த்தி செய்திருத்தல் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் பீடத்தின், SLQF மட்டம் 2 இல் 30 திறமை மட்டத்தினை கொண்ட ஒரு உயர்தர சான்றிதழ் கற்கை நெறியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

மேலும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் 24.08.2025 அன்று நடத்தப்படும் தேர்வு பரீட்சையிலும் சித்தி பெற்றிருத்தல் கட்டாயமானது.

விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து 31.07.2025 வரை விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களிற்கு யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவில் என்னும் முகவரியூடாக அல்லது 021222 3374 என்னும் தொலை பேசி ஊடாக தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி)

## ஆங்கிலக் கற்கைநெறிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் குறுகிய கால ஆங்கில கற்கைநெறிக்கான (Short Course in Listening an Speech Programme) விண்ணப்பப் படிவங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 வயதிற்கு மேற்பட்ட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்கள் 12.07.2025 இற்கு முன்னதாக யாழ்ப்பாண பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவிலில் அமைந்துள்ள நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி)

# எவ்வகையான அச்சுறுத்தல் ஏற்பட்டாலும் வழக்கிலிருந்து விலக மாட்டேன்!

### சித்துபாத்தி மயான நிர்வாக சபை உறுப்பினர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எந்தவகையான அச்சுறுத்தல்கள் வந்தாலும் சித்துபாத்தி மனித புதைக்குழி வழக்கிலிருந்து விலகப் போவதில்லை எனக் குறித்த வழக்கைத் தாக்கல் செய்துள்ள சித்துபாத்தி மயான நிர்வாக சபை உறுப்பினரான கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

செம்மணி பகுதியில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் இதனைத் தெரிவித்த அவர் தமக்கு அச்சுறுத்தல் நிலவுவதாகவும் குறிப்பிட்டார்.

தற்சமயம் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுவரும் செம்மணி மனித புதைகுழியை அண்மித்த பகுதிகளில் மர்ம வாகனங்கள் நோட்டமிடுவதாக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தன.

அந்த செய்திகள் முற்றும் முழுதாக உண்மை எனவும் அந்த மர்ம வாகனமானது தமது வீட்டு அருகாமையிலும் வந்திருந்ததாகவும் மனுதாரரான தம்மை அச்சுறுத்துவதே இதன் நோக்கமாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே அச்சுறுத்தல்கள் மற்றும் எத்தகைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டாலும் வழக்கில் தாம் உறுதியாக இருப்பதாகவும் மக்களும் உறுதியாக தமது சாட்சியங்களைத் தருகின்றார்கள் எனவும் சித்துபாத்தி மயான நிர்வாகசபை உறுப்பினரான கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை செம்மணி - சித்துபாத்தி மனித புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள், 14 ஆவது நாளாக நேற்றும் இடம்பெற்றது.

அதற்கமைய, நேற்றுவரை 56 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவற்றில் 50 என்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டு நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டுள்ளன. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 350 | 400 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 450 | 350 | 450 |
| தக்காளி | 180 | 180 | 250 | 150 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 300 | 200 |
| கோவா | 300 | 400 | 450 | 300 | 400 |
| கரட் | 400 | 400 | 450 | 370 | 500 |
| பூசணி | 120 | 170 | 150 | 120 | 200 |
| புடோல் | 100 | 150 | 200 | 100 | 200 |
| வாழைக்காய் | 100 | 130 | 120 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-350 | 350 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 120 | 120 | 200 |
| பாகற்காய் | 500 | 600 | 700 | 600 | 600 |
| வெண்டக்காய் | 200 | 150 | 200 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 330 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 300 | 350 | 300 | 300 | 200 |
| லீக்ஸ் | 300 | 250 | 350 | 250 | 400 |
| பீற்றூட் | 250 | 250 | 350 | 240 | 250 |
| கறிமிளகாய் | 600 | 600 | 700 | 550 | 600 |
| முருங்கைக்காய் | 500 | 600 | 700 | 420 | 600 |
| போஞ்சி | 400 | 450 | 600 | 450 | 800 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 350 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 80 | 50-100 | 100 | 50 | 100 |
| தேசிக்காய் | 300 | 300 | 300 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 160 | 180 | 150 | 80-150 | 130-160 |
| இராசவள்ளி | 600 | 700 | 600 | 580 | 600 |
| வெங்காயப்பூ | 450 | 400 | 600 | -- | 400 |
| முள்ளங்கி | 200 | 160 | 200 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 120 | 80 | -- | 200 |

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-திருவண்ணைநகர் ஸ்ரீமத் வாலாம்பிகா சமே ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி ஆலய (வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோயில்) வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து மஹோற்சவங்கள் இடம்பெற்று எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும், 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் அன்று இரவு 6 மணிக்கு கொடியிறக்கமும் மறுநாள் செவ்வாய்க்கிழமை இரவு 6 மணிக்கு திருவூஞ்சல் திருவிழாவும் இடம்பெறவுள்ளதென ஆலய பரம்பரை தர்மகர்த்தாவும் உரிமையாளரும் முகாமையாளருமாகிய க.வைத்திலிங்கம் செட்டியார் தெரிவித்துள்ளார்.

## ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

கலாநிதி ந.இரவீந்திரனின் நூல்கள் ஆய்வரங்கு நிகழ்வுகள் எதிர்வரும் 19 மற்றும் 20 ஆகிய இரு தினங்களும் பண்டத்தரிப்பு காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணி முதல் 6 மணி வரை இடம்பெறவுள்ள முதல்நாள் நிகழ்வு மறுமலர்ச்சி மன்றத்தின் தலைவரும் ஓய்வு நிலைக் கல்விப் பணிப்பாளருமாகிய சு.சுந்தரசிவம் தலைமையில் இடம்பெறும். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு இந்தியாவுக்கே சொந்தம்

## ஹிந்து மக்கள் கட்சித் தலைவர்

(சென்னை) ..........................

**கச்சதீவில் தேசியக் கொடி ஏற்றும் முயற்சி நடைபெற்று வருவதாக, ஹிந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜுன் சம்பத் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் தஞ்சாவூரில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திர தினம், விநாயகர் சதுர்த்தி மற்றும் குடியரசு தினம் ஆகிய மூன்று நாட்களிலும் கச்சதீவில் தேசியக் கொடி ஏற்ற முயற்சிப்போம் எனவும் கச்சதீவு இந்தியாவிற்குச் சொந்தமானது என்பதை அறிவிக்கவே இந்த முயற்சி எனவும், அவர் குறிப்பிட்டார். (நி)

# அனைத்து சிரேஷ்ட பாடசாலைகளுக்கும் அடுத்த ஆண்டிற்குள் இணைய வசதி

## பிரதமர் அறிவிப்பு

(கொழும்பு)

2026 ஆம் ஆண்டு இறுதிக்குள் அனைத்து சிரேஷ்ட பாடசாலைகளுக்கும், இணைய வசதிகள் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுவதாகப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்ற விவாதத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். 1000 பாடசாலைகளுக்கு பிற தகவல் தொழில்நுட்ப உபகரணங்களை வழங்க முன்மொழியப்பட்டுள்ளது. இதற்காக அமைச்சரவை அனுமதியும் பெறப் பட்டுள்ளது.

இதுவரை, 1500 பாடசாலைகளுக்கு 1900 ஸ்மார்ட் போரட்கள் விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கல்வித் துறையின் அனைத்து நிலைகளையும் உள்ளடக்கிய ஒரு தேசிய கல்வி மேலாண்மை அமைப்பை உருவாக்குவதற்கான ஆரம்பப் பணிகளும், தூய்மை இலங்கை திட்டத்தின் கீழ் இலங்கை விமானப்படையின் தொழில்நுட்ப உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2026 ஆம் ஆண்டு இறுதிக்குள் அனைத்து இடைநிலைப் பாடசாலைகளுக்கும் இணைய வசதிகள் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

பாடசாலைகளுக்கு 5,000 ரூபா வரம்பற்ற தரவு தொகுப்பு அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். (நி)

# இலங்கைத் தமிழர்களுக்கு தமிழகத்தில் 729 வீடுகள்

(சென்னை)

தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல்லாக, ஐந்து மாவட்டங்களில் உள்ள மறுவாழ்வு முகாம்களில் புதிதாகக் கட்டப்பட்ட 729 வீடுகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கடந்த திங்கட்கிழமை திறந்து வைத்தார். 38.76 கோடி இந்திய ரூபா செலவில் கட்டப்பட்ட இந்த வீடுகள் விழுப்புரம், திருப்பூர், சேலம், தர்மபுரி மற்றும் விருது நகர் ஆகிய மாவட்டங்களில் உள்ள அகதிகள் முகாம்களில் அமைந்துள்ளன. (நி)

லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு. வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே
வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(1309)
UK-1350, Australia-1950, Canada-2550,
India-1490, Germany-1990, Italy-2250,
Swiss-2490, France-2180
Western Union WU MoneyGram Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
தொடர்புகளுக்கு
077 839 3974, 076 889 1308

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

# INVITATION FOR BID 2025/II
# JAFFNA MUNICIPAL COUNCIL

1. The Chairman, **Regional Procurement Committee**, on behalf of the **Municipal Mayor, Jaffna Municipal Council, Jaffna** invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. **All the projects will be funded via Provincial special grant from The Government of the Democratic Socialist Republic of Srilanka.**
2. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure from the registered contractors.
3. To be eligible for contract award, the successful bidder should not have been black listed and should have been registered in the relevant field at the Construction Industry Development Authority (CIDA), in the field of Building for grade mentioned in the table below valid until the date of closing of the bids. Further, the registration should be valid at the date of award. **" Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987."** ***The original certificate of registration ( PCA 03) shall not be awarded to any bidder unless such bidder had submitted the PCA 03 certificate.***
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement **document.** Additional details are provided in the **Bidding Data and Contract Data** (Section 5) for SBD 1 Documents (Works specified in **GROUP B** in Table below)
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days **From 2025-07-11 To 2025-07-24** during **09:00 hrs and 14:00 hrs.**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Municipal Commissioner, Jaffna Municipal Council, Point pedro Road, Nallur, Jaffna (T.P:021-221 7691 / 021 222 2019, Fax:021 222 2334) from 9:00 hrs to 14:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Jaffna Municipal Council, Point pedro Road, Nallur, Jaffna on or before as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Jaffna Municipal Council, Point pedro Road, Nallur, Jaffna as stated in table below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.
10. Bids shall be accompanied by a copy of valid CIDA Registration.
11. Procurement Committee will keep the right to make final decision in regard to accept or reject Bids and it will be the final regarding the bids.

| | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | From 2025-07-11 To 2025-07-24 |
| | Pre-Bid Conference | At 11.00 AM on 2025-07-16 |
| | Closing and Opening of Bids | At 10.30 AM on 2025-07-25 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| Group B | | | | | | | | |
| JMC/PMD/OTHERS/2025/II/01 | RENOVATION OF JAFFNA PUBLIC LIBRARY BUILDING | 24.838 | 84 Days | C6 or Above (Building ) | 8,500.00 +Vat 18% | 373,000.00 | 2025-11-07 | 77 Days |

**Chairman**
**Regional Procurement Committee, Jaffna Municipal Council,**
**Point pedro Road, Nallur, Jaffna.**

(C-3375)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## அந்தாட்டிக்கா கண்டத்திற்கு சுற்றுலா செல்வோர் அதிகரிப்பு



(அந்தாட்டிக்கா)

பனி படர்ந்த அந்தாட்டிக்கா கண்டத்திற்கு சுற்றுலா செல்பவர்கள் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது.


30 ஆண்டுகளுக்கு முன் ஆண்டுக்குச் சராசரியாக 8 ஆயிரம் பேர் மட்டுமே அந்தாட்டிக்கா சென்றனர்.

அது இப்போது ஒரு இலட்சத்து 25 ஆயிரமாக அதிகரித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தப் போக்கு தொடர்ந்தால் மிகப்பெரிய அளவில் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் ஏற்படும் என்றும் இது அந்த பகுதிக்கு மட்டுமானதாக இல்லாமல் உலகம் முழுவதுக்குமானதாக இருக்கும் என்றும் நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

எனினும் அந்தாட்டிக்கா யாருடைய கட்டுப்பாட்டிலும் இல்லாததால் அங்கு வருபவர்கள் எண்ணிக்கையை எப்படி கட்டுப்படுத்த முடியும் என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

அதே நேரம் அந்தாட்டிக்கா தொடர்பான செயற்பாடுகளை ஒரு அமைப்பு கவனித்து வரும் நிலையில் அது சுற்றுலாப் பயணிகளிடம் இருந்து வரியை வசூலிக்கலாம் அல்லது பயணிகளின் எண்ணிக்கைக்கு உச்ச வரம்பு நிர்ணயிக்கலாம் என்பது போன்ற யோசனைகளும் சூழலியலாளர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன. (நி)



# பாலஸ்தீனத்தை த
# ஏற்க முடி
## இஸ்ரேல் பிரதமர் அ
## அறிவிப்பு



**(வோஷிங்டன்)▪▪▪▪▪ பாலஸ்தீனத்தை தனி நாடாக ஏற்கவே முடியாது என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவித்துள்ளார்.**

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடனான சந்திப்புக்கு பின், செய்தியாளர்களிடம் பேசிய இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இவ்வாறு தெரிவித்தார்.

மேற்காசிய நாடுகளான இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே தீவிர போர் நடந்தது.

ஈரானின் அணுசக்தி நிலையங்கள் அழிக்கப்பட்டன.

இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்காவும் இணைந்து ஈரானை தாக்கியது.

அதன் பின், இரு தரப்பிலும் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், ஈரானுடனான போரில் வெற்றியடைந்ததற்காக இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவை அழைத்து, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் விருந்து வைத்தார்.

இந்தாண்டில் இருவருக்கும் இடையே நடக்கும் மூன்றாவது சந்திப்பு இது. விருந்தின் போது பாலஸ்தீனத்தின் காசாவில் போரை நிறுத்தும்படி ட்ரம்ப் வலியுறுத்தினார்.

அமைப்பினர் இடையே இது தொடர்பாக கட்டாரில் மறைமுகப் பேச்சு நடந்து வருகிறது.

இதற்கிடையே விருந்துக்கு... கூட்ட... னர். ... அ... தடை... ட்ரம்பி... ஆ... இல்ல... மே... கொல... பே... நெத... எதுவு... ஹ...

## இந்தோனேசியாவில்
## குமுறியது எரிமலை
## சூழ்ந்தது சாம்பல் மேகம்

(ஜெத்தா)

கிழக்கு இந்தோனேசியாவிலுள்ள லெவோதோபி லாகி லாகி எரிமலை கடந்த திங்கட்கிழமை உக்கிரமாகக் குமுறி 18 கிலோமீற்றர் உயரத்துக்கு சாம்பலையும் புகையையும் வெளித்தள்ளியுள்ளது.

இதனையடுத்த இந்தோனேசிய பாலித் தீவுக்கான மற்றும் அந்தத் தீவிலிருந்தான விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

சுற்றுலாத் தீவான புளோரஸிலேயே எரிமலையே குமுறியுள்ளது.

பாலி சர்வதேச விமான நிலையத்துக்கான 24 விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் இந்த பிராந்தியத்தினூடாக மேற்கொள்ளப்பட்டு வந்த புளோரஸ், அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், தென்கொரியாவுக்கான விமானச் சேவைகள் இரத்து செய்யப்பட்டும் தாமதப்படுத்தப்பட்டும் உள்ளன.

இருப்பினும் சில சேவைகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மீண்டும் தொடங்கின.

நவம்பர் மாதத்திற்குப் பின்னர் திங்கட்கிழமை காலை அந்நாட்டு நேரப்படி 11:05 மணிக்கு எழுந்த வெப்ப மேகங்கள் மிக உயர்ந்ததாக இருந்தது என புவியியல் நிறுவனத் தலைவர் முகமது வாஃபித் தெரிவித்துள்ள... க... குடியி... செல்... சிகரா... மலை... இரவு... ளிகள்... இ... பட்ட... இடம்... முகா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## தனிநாடாக
## யாது!
## அமெரிக்காவில்



க்குப்பின் இரு தலைவர்களும் ட்டாக செய்தியாளர்களை சந்தித்த ர்.

அப்போது போர் நிறுத்தத்திற்கு எது டையாக உள்ளது என, ஜனாதிபதி ம்பிடம் கேட்கப்பட்டது.

அதற்கு அவர், "எந்தத் தடையும் ல்லை என்று நினைக்கிறேன்.

பேச்சுக்கள் மிகவும் சிறப்பாக போய்க் காண்டிருக்கின்றன," என்றார்.


போர் நிறுத்தம் குறித்து பேசிய ந்தன்யாகு, பெரிய சலுகைகள் துவும் காட்டப்பாது.

ஹமாஸ் மற்றும் பாலஸ்தீன அரசுகள் பயங்கரவாதிகளுக்கான பதுங்கு குழிகளைக் கட்டி எங்கள் நாட்டிற்குள் அவர்களை அனுப்பி படுகொலைகளையும், பலாத்காரத்தையும் அரங்கேற்றினர்.

"காசா எங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும்.

பாலஸ்தீனத்தை தனி நாடாக ஏற்க முடியாது." எனத் தெரிவித்தார். (நி)

## நிலச்சரிவால் தரைமட்டமான கிராமம்
## 67 பேரின் உயிரைக் காப்பாற்றிய நாய்
### இமாச்சல பிரதேசத்தில் நெகிழ்ச்சி சம்பவம்



(டில்லி)

இந்தியாவின் இமாச்சல பிரதேச மாநிலத்தில் கடந்த ஜூன் 20ஆம் திகதி முதல் கனமழை பெய்து வருகிறது.

இதனால் 16 இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கனமழை காரணமாக 50 பேர் உயிரிழந்துள்ளனர். 80 இற்கு மேற்பட்டவர்கள் காணாமல் போய் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

7 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும், அதேவேளை 225 வீதிகள் வெள்ளம் காரணமாக மூடப்பட்டுள்ளன. சம்பா, காங்க்ரா, மண்டி, குலு, சிம்லா, சோலன் மற்றும் சிர்மௌர் ஆகிய மாவட்டங்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளன.

அதிலும் மண்டிப் பகுதி மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டது. ஜூன் 30 ஆம் திகதி நள்ளிரவு மண்டி மாவட்டத்தில் உள்ள தரம்பூர் பகுதியில் உள்ள சியாதி கிராமம் நிலச்சரிவால் பாதிக்கப்பட்டது.

இந்நிலையில், நிலச்சரிவிற்கு முன்பு நள்ளிரவில் அங்கிருந்த ஒரு நாய் கடுமையாக குரைத்துள்ளது. நாயின் சத்தத்தைக் கேட்டு கண் விழித்த வீட்டின் உரிமையாளர் வீட்டுச் சுவரில் விரிசல் விழுந்து தண்ணீர் உள்ளே வருவதை பார்த்துள்ளார்.

உடனடியாக அவர் அந்த நள்ளிரவில் அக்கிராமத்தில் உள்ளவர்களை எழுப்பி எச்சரித்துள்ளார். இதனால் கிராமத்தில் இருந்த அனைவரும் பாதுகாப்பான இடத்திற்கு சென்றுள்ளனர்.

பின்னர் சிறிது நேரத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் கிராமத்தில் உள்ள பல வீடுகள் தரைமட்டமாகின. நாயின் சத்தத்தால் சியாதி கிராமத்தின் 20 குடும்பங்களைச் சேர்ந்த 67 பேர் அதிஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

## ஆசியாவில் அதிக வயதான
## யானை உயிரிழப்பு

ஆசியாவிலே அதிக வயதுடைய யானை என அறியப்பட்ட "வட்சலா" என்ற பெண் யானை, உடல் நலக்குறைவால் உயிரிழந்துள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் உள்ள புலிகள் சரணாலயத்தில் பராமரிக்கப்பட்டு வந்த குறித்த யானை சமீப காலமாக உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்தது.

யானையின் உடலம் நல்லடக்கம் செய்யப்பட்டதாகவும் சரணாலய தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆசியாவிலேயே வயதான யானை என்பதால் சுற்றுலாப்பயணிகள் பலரும் வட்சலாவை பார்வையிட வருவது அதிகம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (நி)



ள்ளார்.

கார்கள் மற்றும் பேருந்துகளில் டியிருப்பாளர்கள் ஏறி தப்பிச் செல்லும்போது எரிமலையின் சரங்களிலிருந்து சிவப்பு நிற எரிமலைக் குழம்பு வெளியேறுவதை இரவு முழுவதும் பகிரப்பட்ட காணொளிகள் காட்டுகின்றன.

இதுவரை 4,000இற்கும் மேற்பட்டோர் அந்தப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிறுவனம் தெரிவித்துள்ளது.



இந்தோனேசியா பசுபிக் "நெருப்பு வளையத்தில்" அமைந்துள்ளது.

அங்கு டெக்டோனிக் தகடுகள் மோதுகின்றன, இதனால் அடிக்கடி எரிமலை மற்றும் பூகம்பங்கள் ஏற்படுகின்றன.

லெவோடோபி லக்கி - லக்கி இந்த ஆண்டு பல முறை குமுறியுள்ளது. ஆனால் இதுவரை எந்தவொரு உயிரிழப்பும் ஏற்படவில்லை.

கடந்த நவம்பரில் ஏற்பட்ட எரிமலை வெடிப்பில் சிக்கி 10 பேர் உயிரிழந்துள்ளதோடு, ஆயிரக்கணக்கானோர் இடம் பெயர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியா செல்கிறார் வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் இரு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம்மேற்கொண்டு இன்று வியாழக்கிழமை மலேசியா செல்லவுள்ளார்.

மலேசியப் பிரதமர் அன்வர் இப்ராஹிம் உள்ளிட்ட அந்நாட்டு அரசாங்கத்தின் முக்கிய பிரமுகர்களை அவர் சந்திக்கவுள்ளார்.

மேலும் அமைச்சர் விஜித ஹேரத் இந்த விஜயத்தின் போது ஆசிய அமைச்சர்கள் மாநாட்டிலும் பங்கேற்கவுள்ளார்.

இதன் போது அவுஸ்திரேலிய, ரஷ்ய மற்றும் பாக்கிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர்களுடனான சந்திப்பிலும் அமைச்சர் விஜித ஹேரத் கலந்து கொள்ளவுள்ளார். (நி)

# நடிகை ஹன்சிகா இலங்கை விஜயம்

(கொழும்பு)

பிரபல தென்னிந்திய நடிகை ஹன்சிகா மோத்வானி நேற்று இலங்கையை வந்தடைந்தார்.

நிகழ்வொன்றில் பங்கேற்பதற்காக அவர் இலங்கைக்கு வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)




# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1991- இந்து
நட்சத்திரம்: மகம்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: O/L.கமம். Driver
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15795

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்:அச்சுவினி
உயரம்:5'8"
தகைமை/தொழில்-A/L,newzealand
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15799

பிறப்பு:1988-இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி-பா-35
உயரம்:5'8"
தகைமை/தொழில்: BEng, MSc, Engineer(newzealand)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண் விவாகரத்தானவர்
தொ.இ: B/15800

பிறப்பு:1991-இந்து
நட்சத்திரம்:சதயம்
கி-பா-25
உயரம்:5'6"
தகைமை/தொழில்:BA,DO
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/15681

பிறப்பு: 1989- இந்து
நட்சத்திரம்:அச்சுவினி
கி-பா-49
7இல் செவ்
உயரம்:5'8"
தகைமை/தொழில்: HNDE,TO
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15621

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1991-இந்து
நட்சத்திரம்-பூரம்
1இல் செவ்
கி-பா-26 1/2
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BA, DO
எதிர்பார்ப்பு: வெளிநாடு. அரச உத்தியோகம்
தொ.இ: G/15515

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்:உத்தரம்
கி.பா -32
உயரம்: 5'4"
தகைமை/தொழில் - Counsuller
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்.வெளிநாடு
தொ.இ: G/15518

பிறப்பு-1987-இந்து
நட்சத்திரம்: அனுசம்
1இல்செவ்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: FineArts,DO
எதிர்பார்ப்பு: வெளிநாடு.விவாகரத்தானவர்
தொ.இ: G/15521

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம்
8இல் சூரி செவ்
கி.பா -72
உயரம்: 5'1"
தகைமை/தொழில் -Pharmacy Course (following)
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15525

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்:அனுசம்
1இல்செவ்
உயரம்: 5'6"
தகைமை/தொழில் - MBA, Lecturer
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம். விவாகரத்தானவர்
தொ.இ: G/15530

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 410



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## பாராட்டு!

ஒருவன் "ஏதாவது வேலை கிடைத்தால் சரி!" என்று அலைந்துகொண்டிருந்தான்.

ஒரு இடத்திலே அவனுக்கு ஒரு வேலையும் கிடைத்தது! அதற்குப்பிறகு கொஞ்ச நாள் கழித்து அவனைப் பார்த்தேன். இப்போது வேலையை விட்டுப் போக வேண்டும்" என்று நினைக்கிறேன்.

என்ன விடயம் என்று விசாரிச்சேன்.

"என்ன சார் செய்வது? எனக்கு மேலே இருக்கிறவன் ஒரு பெரிய கோபக்காரனாக இருக்கிறான். எதுக்கு எடுத்தாலும் கோபப்படுகிறான். அனுசரித்துப்போவது ரொம்ப கஷ்டமாக இருக்கு. அது தான் "அந்த இடத்தை விட்டு விலகிவிடலாமா" என்று பார்க்கிறேன்" என்றான்.

இப்படி இவன் சொன்னதைக்கேட்டதும், ஏற்கனவே நான் படிச்ச ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது.

அதை அவனிடம் சொன்னேன்.

அது என்ன விபரம் என்றால்

நியூயோர்க்கிலே ஒரு மனநல மருத்துவ நிபுணர். ஒருநாள் அவரைத் தேடி ஒரு பெண் வந்தது.

"டாக்டர். உங்களிடம் ஒரு முக்கியமான ஆலோசனை கேட்கலாம் என்று வந்திருக்கேன்!" என்றது அந்தப் பெண்!

"என்னம்மா விடயம்?" என்று விசாரிச்சார் அவர்.

அந்தப் பெண் விபரத்தைச் சொல்லியது.

"டாக்டர்... நான் ஒரு தொழிற்சாலையிலே தலைமை அதிகாரியின் சுருக்கெழுத்தாளராக வேலை பார்க்கிறேன்!" அந்த அதிகாரி ஒரு சிடுமூஞ்சி!

எதுக்கெடுத்தாலும் கோபப்படுகிறார்.

அவருடைய கோபதாபங்களை என்னாலே சமாளிக்க முடியவில்லை. மனதுக்கு ரொம்ப கஷ்டமாக இருக்கு தாங்க முடியவில்லை! இரவு முழுவதும் சரியாகத் தூங்கவும் முடியவில்லை! அந்த அளவுக்கு வேதனையாக இருக்கு! அதனாலே இந்த வேலையை விட்டுவிடலாம் என்று பார்க்கிறேன். அதற்கு முன்னால் உங்களுடைய ஆலோசனையைக் கேட்கலாம் என்று வந்திருக்கிறேன். என்ன சொல்றீர்கள்?" என்று கேட்டது அந்தப் பெண்!

அந்த நிபுணர் இந்தப் பெண் சொல்வது எல்லாத்தையும் பொறுமையாக, கவனமாக கேட்டுக் கொண்டார். பின் சொன்னார்.

"அம்மா! நான் ஒரு யோசனை சொல்கிறேன். அதன் பிரகாரம் மூன்று மாதம் நடந்துஅதன்பின்பு என்னிடம் வா! அப்புறமாக ராஜினாமா செய்யலாமா வேணாமா என்பதைப் பற்றி யோசிப்போம்!" என்றார். "என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்!" என்று கேட்டது அந்தப் பெண்! அந்த நிபுணர். அந்த யோசனையைச் சொன்னார்.

"இதோ பாரும்மா. சிடு மூஞ்சியிடமும் சில நல்ல குணங்கள் பதுங்கியிருக்கும். அதையெல்லாம் தேடிக் கண்டு பிடித்து வாயார பாராட்டு. ஒரு நாளைக்கு ஒரு பாராட்டு என்று வைத்துக்கொள்! இப்படி தொடர்ந்துசெய் பார்க்கலாம்!" என்று சொல்லி அனுப்பினார்.

அந்தப் பெண் மறுநாள் வழக்கம் போல வேலைக்குப் போனது. சுருக்கெழுத்து எழுதுவதற்காக தன்னுடைய அதிகாரியின் அறைக்குப் போனது அந்த அதிகாரி போட்டிருந்த சட்டை அழகாக இருந்தது!

"சார் உங்க சட்டை ரொம்ப நல்லா இருக்கு சார்!" என்று மனதார பாராட்டினார்!

அடுத்த நாள். அவனுடைய ஆங்கில எழுத்து நடையைப் பாராட்டியது! இப்படி தினமும் ஒரு பாராட்டு!

இப்படி பாராட்டு ஏற ஏற சிடுமூஞ்சித்தனம் கொஞ்சம் கொஞ்சமாக குறைய ஆரம்பித்தது.

மூன்று மாதம் கழித்து அந்தப் பெண் மறுபடியும் மனநலமருத்தவ நிபுணரிடம் வந்தது.

"என்னம்மா. வேலையை ராஜினாமா பண்ணலாமா?" என்று கேட்டார் அந்த நிபுணர்.

"அது எப்படி முடியும்?" என்றது அந்தப் பெண்" ஏன்?" என்று கேட்டார் அவர். "நான் அவரைக் கல்யாணம் செய்து கொள்ளப்போகிறேன் இப்ப அவர் என்னுடைய காதலர் - இதோ போட்டிருக்கேனே வைர மோதிரம். இது அவர் எனக்கு பரிசாகக் கொடுத்தது!

என்றது அந்தப் பெண் வெட்கப்பட்டுக்கொண்டே.

சிடுமூஞ்சிக்கு வந்த வாழ்வைப் பாருங்கள் சார். கொஞ்ச நாளிலே அவர்கள் இரண்டு பேரும் கல்யாணம் செய்து கொண்டார்களாம்!

இதுதான் நான் பத்திரிகையிலே படித்த செய்தி.

இதை என்னிடம் வந்த, நம் ஆளிடம் சொன்னேன். அவன் கொஞ்சம் யோசித்தான். "சார். நானும் என் முடிவை மாற்றப்போகிறேன். இதே அணுகுமுறையைக் கடைப்பிடிக்கப் போகிறேன்.

எனக்கு மேலே இருக்கிறானே ஒரு சிடுமூஞ்சி, அவனை கூடிய சீக்கிரம் மாற்றி விடலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. உங்கள் யோசனைக்கு ரொம்ப தேங்க்ஸ்! ஒரு மூன்று மாதம் கழித்து நானும் ஒரு கல்யாணப் பத்திரிகையோடு உங்களை வந்து சந்திக்கிறேன்!" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான். "அது எப்படி?" என்றேன் ஒன்றும் புரியாமல்!

"அந்த சிடுமூஞ்சிக்கு ஒரு பெண் இருக்கு சார். என்கூட படிச்சது..! நான் அவரிடம் வேலைக்கும் சேர்ந்ததே அதற்காகத்தான் சார்!" என்கிறான் அசடுவழிய!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட விடுதிகளை பதிவு செய்யக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளுக்குள் காணப்படும் அனைத்து விடுதிகள், தனியார் மாணவர் விடுதிகள், வீடுகளில் அறை கொடுத்து பணம் பெற்றுக்கொள்ளும் வீட்டின் உரிமையாளர்கள்மற்றும்வீடுகளை நாளாந்த, வாரந்த, மாதாந்த அடிப்படையில் வாடகைக்கு வழங்குபவர்கள் அனைவரும் எதிர்வரும் 30.07.2025 ஆம் திகதி மாலை 4 மணிக்கு முன்னர் நல்லூர் பிரதேச சபையில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் அறிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை நல்லூர் பிரதேச சபையின் தலைமைகாரியாலயம். கொக்குவில் உப அலுவலகம், நல்லூர் உப அலுவலகம் ஆகியவற்றில் பெற்றுக்கொள்ள முடியும்.

அருகில் காணப்படும் விரைவு எதிர்வினை முகவரியினை (QR Code) வருடல் (Scan) செய்வதன் மூலமும் விண் ணப்பப்படிவத்தினை பதிவிறக்கிக் கொள்ள முடியும்.

பெற்றுக்கொண்ட விண்ணப்பப் படிவங்களினை பூரணப்படுத்தி எதிர் வரும் 30.07.2025 புதன்கிழமை மாலை 4 மணிக்கு முன்னர் மேற்குறிப்பிட்ட அலுவலங்களில் ஒப்படைக்க வேண்டும்.

நல்லூர் பிரதேச சபையின் இவ் பகிரங்க அறிவித்தலினை உதாசீனம் செய்து தங்களுடைய விடுதிகளை நல்லூர் பிரதேச சபையில் குறித்த காலப் பகுதிக்குள் பதிவு செய்யாமல் இருப்பவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கைகளை நல்லூர் பிரதேச சபை மேற்கொள்ளும்எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)



சூழல் உணர்வுமிக்க சமூக பொறுப்புணர்வுடன் கூடிய கல்விச் சுற்றாடலை நிர்மாணித்தல் என்ற தொனிப்பொருளில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு நாடு பூராகவும் நேற்று பாடசாலைகளில் கிளீன் சிறீலங்கா செயற்றிட்டத்தை முன்னெடுத்திருக்கின்ற நிலையில் தர்மபுரம் மத்திய கல்லூரியிலும் முன்னெடுக்கப்பட்டது. மாணவர்களுடன் பெற்றோர்களும் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர்கள், பொலிஸார் பங்கெடுத்திருந்தனர்.

(படங்கள் தேவானந்தன்.)

# விடத்தல் தீவு பன்னாட்டு மாநாடு - 2025

மன்னாரில் இம்மாதம் 11 ஆம் 12 ஆம் திகதிகளில் விடத்தல்தீவு கிராமத்தை மையப்படுத்தி "விடத்தல்தீவு ஒரு குறிக்கோளுடன் கூடிய பல கலாசார அம்சங்கள் நிறைந்த ஒரு கிராமம்" என்ற பொருள்பட

**"விடத்தல்தீவு பன்னாட்டு மாநாடு"**

ஒன்று நடத்தப்படவுள்ளது. இம்மாநாடு, அவ்வூரைச் சார்ந்த துறைசார் வல்லுநர்கள், கல்விமான்கள் மற்றும் சமூக முன்னேற்றத்திற்காகப் பணியாற்றும் நபர்கள் ஒன்றுசேரும் ஒரு அரிய சந்திப்பாக அமயவிருக்கிறது.

அதே நேரத்தில் இம் மாநாடு பொருளாதாரம், கல்வி, சுற்றுச்சூழல், சமயம், கலாச்சாரம், பண்பாடு மற்றும் விளையாட்டு போன்ற பல்வேறு துறைகளில் நடைபெற்ற நிகழ்வுகளை ஆய்வு செய்து ஆவணப்படுத்துவதோடு இவ்விடயங்களில் பரஸ்பர புரிதலை ஏற்படுத்தி மக்களின் வாழ்வியலை மேம்படுத்தும் ஒரு முக்கிய அமர்வாக அமையவுள்ளது.

மன்னாரில் அமைந்துள்ள விடத்தல்தீவுக் கிராமத்தின் சிறப்பும், பண்பாடும் மற்றும் கலை கலாசார பாரம்பரியமும் இம் மாநாட்டின் 2ஆம் நாள் கலை நிகழ்ச்சிகளிலும் இடம் பெறவுள்ளது.

போரின் அனர்த்தங்களினால் உருக்குலைந்து போன விடத்தல் தீவு போன்ற கிராமங்களின் பொருளாதார சமூக கலாசார அம்சங்களை மீள்கட்டியெழுப்புவதற்கும் ஆவணப்படுத்துவதற்குமான இம்மாநாடு அமையும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

ஏற்பாட்டுக்குழு

# இன்று வியாழன் 10-07-2025 கதிர்காமம் கந்தன் 'ஆனிவேல்' - நாகபூசணி - தீர்த்தம்

**பல வழி துன்பம், இன்னல்களால் இறந்தவர்களது ஆத்மா சாந்தியடையவும் நமக்கும் இன்னல்கள் துன்பங்கள் நீங்கவும் கதிர்காமக் கந்தனையும் நாகபூசணி அம்பாளையும் திருப்புகழ் கந்தர் அந்தாதி கந்தர் அலங்காரம், அபிராமி அந்தாதியும் ஓதுவோம் பிரார்த்திப்போம்.**

இம்முறை ஆனிவேல் கதிர்காமச் சிறப்பு திருப்புகழ் ஓத எம் பெருமான் **அருட்கதிர்** வீசும்

**யம தண்டனைப் பயத்தை விலக்க**

**வருபவர்க ளோலை கொண்டு நமனுடைய**
**தூத ரென்று**
**மடிபிடிய தாக நின்று - தொடர்போது**
**மயலதுபொ லாத வம்பன் விரகுடைய னாகு மென்று**
**வசைகளுட னேதொ டர்ந்து அடைவார்கள்**
**கருவியத னாலெ றிந்து சதைகள்தனை யேய ரிந்து**
**கரியபுன லேசொ ரிந்து - விடவேதான்**
**கழுமுனையி லேயி ரென்று விடுமெனும வேளை கண்டு**
**கடுகிவர வேணு மெந்தன் முனமேதான்**
**பரகிரியு லாவு செந்தி மலையினுட னேயி டும்பன**
**பழநிதனி லேயி ருந்த - குமரேசா**
**பதிகள் பல வாயி ரங்கள் மலைகள்வெகு கோடி நின்ற**
**பதமடியர் காண வந்த கதிர்காமா**
**அரவுபிறை பூளை தும்பை விலுவமொடு தூர்வை**
**கொன்றை**
**யணிவர் சடை யாளர் தந்த - முருகோனே**
**அரகரசி வாய சம்பு குருபரகு மார நம்பு**
**மடியர்தமை யாள வந்த பெருமாளே.**

எமது உயிரைக் கவர யம தூதுர்கள் விடாப்பிடியாக நின்று என்னைத் தொடரும் போது என்னைப் பொல்லாதவன், வம்பன், துஷ்டன், தந்திரம் உடையவன் என என்னைத் தொடர்கின்ற போதும், பல ஆயுதங்களை வீசிச் சதைகளை ரத்தம் சொரியவும் விழுமாறு ஏவும் போது அவற்றை அறிந்து நீ வேகமாக என் முன் வரவேணும். **திருப்பரங்குன்றம், செந்தூர் முருகன், பழனிமலை ஆகிய தலங்களிலும் பல ஆயிரக் கணக்கான தலங்கள், மற்றும் மலைகள் வெகு கோடிக் கணக்கானவை-** இவை தமில் நின்ற உனது திருவடி களை அடியார்கள் காணும் பொருட்டு எழுந்தருளி வந்துள்ள **கதிர்காமத்தலைத்தனே!**

அரகர, சிலாய, சம்பு, குருபர,குமார நம்பும் அடியார்களை ஆண்டருள வந்த பொருமாளே! வேளை கண்டு தடுகிவரவேணும் எந்தன் முன்னே தான்.

இது திருப்புகழ் அவசியம் இலங்கை வாழ் அனைவரும் **ஓதுவேணும்** பல காலம் **அல்லைப்படும் மக்களைக் காக்கும் கதிர்காமத்தான்.**

இன்றைய ஆனிப்பறுவத்தினம் கதிர்காம "ஆனி வேல்" தீர்த்தமும், நயினை நாகபூசணித் தீர்த்தமும் 10.07.2025 வியாழன் குருதினத்திலும் நாமும் விரதம் இருந்து திருப்புகழில் மூன்றாவது வரி.

"கருவியதானாலே றிந்து தசைகள் தனையேய ரிந்து கரியபுனலே சொரிந்து விடலோ விடவே தான்" அவ்வாறு சிந்துமாறு விழுமாறு **செம்மணியிலும் இவ்வாறு மறு இடங்களில் மறைந்த ஆத்மாக் களைச் சாந்தியடையப் பிரார்த்திப்போம்.**

கதிர்காமம் யாத்திரை செல்வபர்களுக்கு **திருவிழா 15 நாட்களும் சிவபூமி அன்னதானம் மதியமும், இரவும் கடந்த அரை நூற்றாண்டாக இந்து கலாசார யாத்திரைகள் மண்டபத்தில்** சிறப்பாக நடாத்துகிறார்கள் கதிர்காமம் தரிசிக்க எங்களது நலனையும் இறை அருளையும் வேறுவோம்.

**மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்**
**அண்ணலார்அடியார் தமை அமுது செய்வித்தல்**
**கண்ணினால்அவர் நல்விழாப் பொலிவுகண்டு**
**ஆர்தல்**
**உண்மையாம் எனில் உலகர் முன் வருக என**
**வுரைப்பார்.**
**2550-சேக்கிழார்**

**"அற்றார் அழி பசி தீர்தல் அஃது ஒருவன்**
**பெற்றான் பொருள்வைப் புழி"**
**2266 திருவள்ளுவர்**

அருணகிரிநாதர் மொத்தம் பத்து கதிர்காமக்கந்தன் மீது திருப்புகழ் ஓதியுள்ளார். இன்று கதிர்காமம் போக முடியாதவர்கள் குருநாதரை வணங்கி, முருகன் கதிர்காமத் திருப்புகழ் ஓதியும் நம் வருங்காலம் நமது பாதுகாப்பையும் ஆலயப் பாதுகாப்பையும் தமிழ் முருகன் தமிழையும் பாதுகாப்போம். அருணகிரிநாதர் 16 ஆம் நூற்றாண்டில் உணர்ந்து இத் திருப்புகழை ஓதியுள்ளோர் எனத்தோன்றுது. **கதிர்காமக்கந்தன்** துணை புரிவான் அருள்வான்.

**முருகா என உனை ஓதும் தவத்தினர் மூதுலகில்**
**அருகாத செல்வம் அடைவர் வியாதி அடைந்து**
**நையார்**
**ஒருகாலமும் துன்பமும் பரகதி உற்றிடுவபர்**
**பொருகானைன் நாடு புகார் சமராபுரிப் புண்ணியனே!**
**சிதம்பரசுவாமிகள்**

க.கு.க.சிவபாலன்
ஈழத்துச் சிதம்பரம்
மாணிக்கவாசகர் மடாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன் பாகம் - 4

### காவியத் தொடர் 817





புகார் நகரம் வரையில் காவேரி நதி தீரத்தில் எண்பத்திரண்டு சிவாலயம் எடுப்பித்த ஆதித்த சோழர், அவருடைய குமாரர் மதுரையும் ஈழமும் கொண்டு தில்லைச் சிதம்பரத்தில் பொன் மண்டபம் கட்டிய பராந்தகச் சோழ சக்கரவர்த்தி, அவருடைய குமாரர் இரட்டை மண்டலத்துக் கன்னர தேவன் படைகளை முறியடித்து ஆற்றூர்த் துஞ்சிய வீராதி வீரராகிய அரிஞ்சய தேவர், அவருடைய குமாரர் ஈழம் முதல் சீட்புலி நாடு வரை ஒரு குடை நிழலில் ஆளும் பழையாறைப் பராந்தக சுந்தர சோழ சக்கரவர்த்தி, அவருடைய மூத்த குமாரர் கோப்பெருமகனார் வடதிசை மாதண்ட நாயகர் யுவராஜ சக்கரவர்த்தி வீர பாண்டியன் தலை கொண்ட ஆதித்த கரிகால சோழர் விஜயம் செய்திருக்கிறார்! பராக்! பராக்!" என்று அக்கட்டியங் கூறுவோன் கூறி முடித்ததும் மழை பெய்து இடி இடித்து ஓய்ந்தது போலிருந்தது.

உடனே அவன் அருகிலிருந்த இன்னொரு கட்டியங்காரன் "கொல்லி மலை மன்னன் ஒரே அம்பில் சிங்கத்தையும் கரடியையும் மானையும் பன்றியையும் சேர்த்துத் தொளைத்த வீரன் வல்வில் ஓரி அவனுடைய பரம்பரையில் வழிவழித் தோன்றிய ராஜாதி ராஜ ராஜமார்த்தாண்ட வீர கம்பீர சம்புவரையன் சோழ சக்கரவர்த்தி குலத்திற்கு என்றும் துணைவன் வீரநாராயண ஏரியின் காவலன் ஐயாயிரம் வீரப் படையின் தண்டநாயகன் தனது சிறு அரண்மனையில் எழுந்தருளியிருக்குமாறு கோப்பெருமகனார் ஆதித்த கரிகால சோழரை மன மொழி மெய்களால் உவந்து வரவேற்கிறான்! சோழ குலத் தோன்றலின் வரவு நல்வரவு ஆகுக!" என்று கூவினான்.

அவன் அவ்விதம் பேரிடி போன்ற குரலில் கூறி முடித்ததும் மேல் மாடியிலிருந்து மலர் மாரி பொழிந்தது. ஆதித்த கரிகாலனும், வந்தியத்தேவனும் அண்ணாந்து பார்த்தார்கள். அங்கே இருந்த பல பெண்களின் சுந்தர முகங்களுக்கு நடுவில் வந்தியத்தேவனுக்கு மணிமேகலையின் மலர்ந்த புன்னகையுடன் கூடிய முகம் மட்டும் தெரிந்தது.

வந்தியத்தேவனும் ஒரு கணம் புன்முறுவல் செய்தான். உடனே தன் காரியம் எவ்வளவு தவறானது என்பதை உணர்ந்தவன் போல் வேறு திசையை நோக்கினான்.

அதே சமயத்தில் மேலே நோக்கிய ஆதித்த கரிகாலனின் முகத்தில் முன்னை விடக் கடுகடுப்பு அதிகமாயிற்று. அவன் குதிரை மீதிருந்து கீழே குதித்தான். மற்ற இருவரும் குதிரை மீதிருந்து இறங்கினார்கள்.

இதற்குள் மறுபடியும் வாத்தியங்களின் கோஷம் முழங்கத் தொடங்கி விட்டது. சற்று அடங்கியிருந்த ஜன சமுத்திரத்தின் ஆரவாரப் பேரொலியும் மீண்டும் பொங்கி எழுந்து விட்டது. விருந்தாளிகளும், அவர்களை வரவேற்பதற்கு வாசலில் நின்றவர்களும் கோட்டை வாசலுக்குள் புகுந்தார்கள். உடனே கோட்டை வாசலின் கதவுகள் படார், படார் என்று சாத்தப்பட்டன.


ஆதித்த கரிகாலன் திரும்பிப் பார்த்துவிட்டு, "ஏன் இவ்வளவு அவசரமாகக் கதவைச் சாத்துகிறார்கள்? தஞ்சைக் கோட்டையில் என் தந்தையைச் சிறை வைத்திருப்பது போல் என்னையும் இங்கே சிறை வைக்கப் போகிறார்களா, என்ன? என்னுடன் வந்த பரிவாரங்கள் என்ன ஆவது?" என்று கேட்டான். இரு கிழவர்களும் சில கணநேரம் திகைத்துப் போய் நின்றார்கள்.

(தொடரும்...)



## சிறுவர் அரங்கம்

### புதிய வனம் உருவானது



முன்னொரு காலத்தில் அடர்ந்த கானகத்தை ஒட்டி ஒரு குடியானவன் குடும்பம் வாழ்ந்து வந்தது. அந்தக் குடியானவனுக்கு குருவாயூரப்பன், என்ற பையன் மற்றும் மனைவியும் இருந்தனர். தினமும் அந்தக் குடியானவன் அடர்ந்த கானகத்துக்குள் சென்று காய்ந்த மரங்களை வெட்டி விறகுகளாக்கிக் கொண்டு வந்து ஊருக்குள் விற்று வாழ்க்கையை நடத்தி வந்தான்.

திடீரென்று குடியானவனுக்கு உடல் நிலை சரியில்லாமல் வீட்டிலேயே படுத்து விட்டான். நாலைந்து நாட்கள் எங்கும் செல்லாததால் வீட்டில் வறுமை வந்து விட்டது. அவன் மனைவி என்ன செய்வது என்று கண் கலங்கினாள். குருவாயூரப்பன் நான் காட்டுக்குப் போகிறேன் என்று அம்மாவிடம் கேட்டான்.

அம்மாவுக்கு மனது கேட்கவில்லை. குருவாயூரப்பனுக்கு வயது பத்துத்தான் ஆகிறது. சிறுவனை எப்படி காட்டுக்கு அனுப்புவது, காட்டில் வசிக்கும் விலங்குகள் ஏதாவது செய்து விடுமே என்று பயந்தாள். அம்மா கவலைப்படாதே, அங்கு காய்ந்து கிடக்கும் விறகுகளை மட்டுமாவது பொறுக்கி எடுத்து வருகிறேன். அதை ஊருக்குள் சென்று விற்று வரலாம். இப்படி அம்மாவுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு அந்தக் காட்டுக்குள் புகுந்தான்.

அடர்ந்த காடாயிருந்தது. குருவாயூரப்பன் அம்மாவிடம் சொல்லிவிட்டானே தவிர காட்டுக்குள் தனியாக நுழைவது அச்சத்தைக் கொடுத்தது. இதுவரை அப்பாவுடன் வந்திருக்கிறான், அப்பொழுதெல்லாம் அப்பா கூட இருந்ததால் பயமில்லாமல் இருந்தது. இப்பொழுது தனியாக இருந்ததால் பயம் வந்துவிட்டது.

பயந்து பயந்து நடுக் காட்டுக்குள் வந்து விட்டான். நல்ல காய்ந்த விறகுகளை பொறுக்க ஆரம்பித்தான். அவனால் எவ்வளவு தூக்க முடியும்? சேர்த்து வைத்த விறகுகளை அங்கிருக்கும் ஒரு கொடியைப் பறித்துக் கட்டினான். அதை தூக்குவதற்கு முயற்சி செய்த பொழுது அவனால் அசைக்கவே முடியவில்லை. அழுகை அழுகையாய் வந்தது. அந்த விறகுக் கட்டின் மேலேயே உட்கார்ந்து கொண்டான்.

அப்பொழுது வான் வழியாக ஒரு தேவதை பறந்து சென்று கொண்டிருந்தாள். நடுக் காட்டில் ஒரு சிறுவன் விறகுக் கட்டின் மேல் அழுது கொண்டு உட்கார்ந்து இருப்பதைப் பார்த்தவுடன் மெல்ல இறங்கினாள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் நினைவில் கொள் மனிதனாகப் பிறந்தவன் பயனின்றி அழியக்கூடாது.

– காரல் மார்க்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வெளிநாட்டுத் தூதுவர்கள் செம்மணியைப் பார்வையிட வேண்டும்

செம்மணியில் அகழப்படும் மனிதப் புதைகுழி இந்த நாட்டில் இடம்பெற்ற தமிழின அழிப் பின் சாட்சியமாகும்.

சொந்த மண்ணில் – ஆட்சி அதிகாரமுள்ளவர்களால் கொன்றொழிக்கப்பட்ட தமிழ் மக்கள் செம்மணியில் வெட்ட வெளி மயானப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ளனர் என்ற செய்தி, இலங்கையில் தமிழ் மக்களுக்கு நடந்த கொடூரம் எத்தன்மையது என்பதைத் துலாம் பரப்படுத்தியுள்ளது.

உண்மை. மாணவி குமாரசாமி கிருஷாந்தி கொலை வழக்கில் சாட்சியமளித்த இராணுவச் சிப்பாய் சோமரட்ண ராஜபக்ஷ; இராணுவத்தால் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட தமிழ் மக்கள் செம்மணியில் புதைக்கப்பட்டனர் எனத் தெரிவித்திருந்தார்.

சோமரட்ண நீதிமன்றில் தெரிவித்த சாட்சியம் அப்போது பெரிதுபடாமல் போனது.

எனினும் தற்போது செம்மணி சித்துப்பாத்தியில் மேற்கொள்ளப்படுகின்ற அகழ்வில் மனித எலும்புக்கூடுகள் வந்தவண்ணமுள்ளன.

இந்த எலும்புக்கூடுகள் எங்கள் இனத்துக்கு இழைக்கப்பட்ட அநீதியின் அடையாளங்கள். தமிழினப் படுகொலையின் சாட்சியங்கள்.

உண்மை. இயற்கை எதனையும் நீண்டகாலம் மறைத்து வைத்திராது என்பது நம் முன்னோர்களின் நம்பிக்கை.

அந்த நம்பிக்கை வீண்போகவில்லை.

ஆம், தமிழ் மக்கள் என்ற ஒரே காரணத்துக்காக அரச படை, தமிழ் மக்களைக் கொன்று குவித்துத் துவம்சம் செய்தது.

அந்த நிட்டூரத்தை மறைப்புச் செய்வதற்காக இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த செம்மணிப் பகுதியில் உடலங்கள் புதைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கொன்று புதைத்துவிட்டால், அந்தக் கொடூரம் சாட்சியமற்று அப்படியே மண்ணோடு மண்ணாகிப் போய்விடும் என்பது அவர்களின் நினைப்பாக இருந்தது.

ஆனால் உண்மை என்றோ ஒருநாள் வெளிவந்தேயாகும். ஆம், அன்று சோமரட்ண கூறிய போது அவருக்கு மனநிலை சரியில்லை எனக் கூறிய பேரினவாதிகளும் உளர்.

ஆனால் இன்று உண்மை வெளிப்பட்டுள்ளது.

ஆயினும் இந்த உண்மை மீது உலக நாடுகள் கவனம் செலுத்த வேண்டும்.

எங்கள் தமிழ் மக்கள் சொந்த நாட்டில் ஆட்சியாளர்களாலும் அரச படைகளாலும் கொன்றொழிக்கப்படுவதற்கு உலக நாடுகளும் ஏதோவொரு வகையில் காரணமாக இருந்துள்ளன.

ஆம், அன்று எங்கள் மீது உலக நாடுகள் கருசனை காட்டியிருந்தால், எத்தனையோ ஆயிரம் அப்பாவித் தமிழ் மக்கள் இன்று உயிரோடு இருந்திருப்பர்.

என்ன செய்வது உலக நாடுகளும் எம்மை வஞ்சித்தன.

ஆகையால் அந்த வஞ்சிப்புக்கு பரிகாரம் தேடும் பொருட்டு வெளிநாட்டுத் தூதுவர்கள் நேரில்வந்து செம்மணி மனிதப் புதைகுழிகளைப் பார்வையிட வேண்டும்.

இதற்கான அழைப்பை நம் தமிழ்த் தரப்புகள் விடுக்க வேண்டும்.

ஆம், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் செம்மணிக்கு வந்ததுபோல, வெளிநாட்டுத் தூதுவர்களும் செம்மணிக்கு வந்து மனிதப் புதைகுழிகளை நேரில் அவதானிப்பது அவசியமாகும்.

## அரச வைத்தியசாலையில் மருந்துச் சீட்டு

# தனியார் மருந்தகத்தில் மருந்து

## இதுவா இலவச மருத்துவம் – சஜித் கேள்வி

(கொழும்பு)

நமது நாட்டின் முக்கிய அங்கமான சுகாதாரக் கட்டமைப்பில் பெரும் சரிவும் வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது. தேசிய வைத்தியசாலையில் காணப்படும் 4 MRI ஸ்கானர்களில் 3 ஸ்கான் இயந்திரங்கள் செயலிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருதய நோயாளிகள் வைத்தியசாலைகளில் பெறும் சேவைகளுக்கு மேலதிகமாக மருந்துகள் மற்றும் பிற பொருட்களைப் பெறுவதற்கு ஒரு இலட்சம் ரூபாவிற்கும் மேல் செலவிட வேண்டியுள்ளது.

நுண்ணுயிர் எதிர்ப்பிகள், மயக்க மருந்துகள் மற்றும் வலி நிவாரணிகளுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுகின்றன. தனியார் மருந்தகங்களில் கூட, இந்த மருந்துகளுக்கான தட்டுப்பாடு அதிகரித்து வருகின்றன.

நமது நாட்டிற்குக் கிடைத்த மிக உன்னத பரிசான இலவச சுகாதார சேவை, இலவசமான ஒன்றாகவே காணப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நோயாளிகளுக்கு சரியான நேரத்தில் சேவைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். இலவச சுகாதாரம் என்பது, அரச வைத்தியசாலையில் இருந்து மருந்துச் சீட்டைப் பெற்று தனியார் மருந்தகத்தில் மருந்து வாங்கும் நடவடிக்கையல்ல. எனவே இந்த இலவச சுகாதாரம் பாதுகாக்கப்பட வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பிலியந்தலை மாகந்தன சங்கல்ப விகாரையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார். (ந-7)

## அமெரிக்க ஜனாதிபதி மனமிறங்கி

# வரிச்சலுகை அளித்தால் அன்றி இலங்கைக்கு விமோசனம் கிட்டாது

## நாமல் எம்.பி விசனம்

(கொழும்பு)

ஜனாதிபதி அநுரவினால் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதங்களுக்கு பதில் கிடைக்கும் என இனியும் எதிர்பார்த்திருக்க முடியாது.

டொனால்ட் ட்ரம்ப் இலங்கை மீது அனுதாபப்பட்டு தனது தீர்மானத்தை மாற்றினாலன்றி, வரிச்சலுகை கிட்டாது எனப்பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள பொதுஜன பெரமுன அலுவலகத்தில் நேற்றுப் புதன்கிழமை (09) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், உலகின் வற் வரி நிலைவரம் தொடர்பில் இப்போதும் அரசாங்கத்துக்கு எதுவும் தெரியாது.

இவ்வாறு எவ்வித அறிவும் இன்றி வரி அறவிடப்படுகிறது.

திட்டமிடலொன்று இன்றி வரி அறவிடப்படும் போது பொருட்களின் விலைகள் மற்றும் சேவைக் கட்டணங்களும் சடுதியாக அதிகரிக்கும்.

வரி விவகாரத்தில் மாத்திரமின்றி எந்தவொரு விடயத்திலும் அரசாங்கம் திட்டமிடல் இன்றியே தீர்மானங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

ஜனாதிபதியால் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்துக்கான பதில் கடிதம் கிடைக்கும் வரை காத்திருக்கின்றோம்.

ஜனாதிபதி செயலகம் தபாலகத்துக்கு அருகில் காத்திருப்பதாகவே தகவல்கள் கிடைத்துள்ளன. ட்ரம்ப் இலங்கை மீது அனுதாபப்பட்டு தீர்மானத்தை மாற்றினாலன்றி, இந்த அரசாங்கத்தால் எதையும் செய்ய முடியாது என்றார். (ந-7)

## மன்னார் நகரசபைத் தலைவருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு

மன்னார் நகரசபையின் தலைவர் டானியல் வசந்தனுக்கு எதிராக நகரசபையின் முன்னாள் தலைவர் அன்ரனி டேவிட்சன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில், மன்னார் நகர சபையின் புதிய தலைவர் அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றில், கடந்த காலங்களில் மன்னார் நகர சபையின், பண்டிகைக் கால கடைகள் ஒதுக்கீடு மற்றும் 5ஜி தொழில்நுட்ப சேவையை வழங்கும் செயற்பாட்டுக்கு அனுமதி வழங்க இலஞ்சம் பெறப்பட்ட தாகவும் அவற்றில் ஊழல் இடம்பெற்றதாகவும் அது தொடர்பாக முறையான விசாரணைகளை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.

மேற்படி கருத்தில் எந்தவித உண்மையும் இல்லை எனவும் பகிரங்கக் குத்தகை மூலம் இடம்பெற்ற விற்பனையில் எந்த ஒரு ஊழலும் இடம்பெறாத, நிலையில் தங்கள் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலும் அதே நேரம் தனிப்பட்ட உள்நோக்கம் கருதியும் மன்னார் நகரசபைத் தலைவர், ஊடக சந்திப்பின் போது கருத்துத் தெரிவித்துள்ளதாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ந-7)

## மண்டைதீவு கண்ணகை அம்மன் கிராம ஊர்வலம் நாளை

மண்டைதீவு பூம்புகார் கண்ணகை அம்மனின் கிராம ஊர்வலம் நாளை (11) வெள்ளிக்கிழமை மாலை இடம்பெறும்.

தொடர்ந்து 14 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு பொங்கல் உற்சவமும் தீமிதிப்பும் நடைபெறும். (ந)

# காற்றின் வேகம் அதிகரிக்கக் கூடும்

வடமாகாணம் உட்பட நாட்டின் பல பகுதிகளில் காற்றின் வேகம் அதிகரிக்கக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளின் சில பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் திருகோணமலையிலும் காற்றின் வேகம் மணிக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில பகுதிகளிலும் பிற்பகல் வேளையில் பலத்த மழை பெய்யக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை, பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக் கூடிய ஆபத்துக்கள் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 10

சொக்கன்

இதனால் அதுவரை அபுஹாசனின் இருப்பிடம் தெரியாமல் திணறிக்கொண்டிருந்த மொசாட்டுக்கு ரொம்ப வசதியாகி விட்டது. வழக்கம் போல்தன்னுடைய உளவாளிகளை வைத்து அபுஹாசனின் நடவடிக்கைகளை நுணுக்கமாக மோப்பம் பிடிக்க ஆரம்பித்தார்கள்.

மொசாட் புலி, தன்னுடைய அவமானக் காயங்களை நக்கிக் கொண்டது. முன்பைவிட அதிக வெறியுடன் பாயத்தயாரானது!

## நிரந்தரமானவன்?

லில்லிஹாமர் சொதப்பல்கள் நடந்துமுழுசாக ஐந்துவருடமாகி விட்டது!

இந்த இடைவெளிக்குள் இஸ்ரேலில் ஏகப்பட்ட அரசியல் மாற்றங்கள் இரண்டு பிரதம மந்திரிகள் மாறி விட்டார்கள். அந்த நாட்டு அரசாங்கத்திலும் சரி மொசாட்டிலும் சரி பழைய சக்திகள் ஓய்வுபெற்று பல புதியவர்கள் தலை தூக்கியிருந்தார்கள்.

ஆனால் இஸ்ரேல் இன்னும் அபுஹாசனை மறந்திருக்கவில்லை. வெளிப்பார்வைக்கு மொசாட் நல்ல பிள்ளைபோல் சமத்தாக உட்கார்ந்திருந்தாலும் பின்னணியில் தகவல்கள் திரட்டுவது அலசுவது திட்டம் தயார் செய்வது அப்புறம் மொத்தத்தையும் எச்சில் போட்டு அழித்து விட்டு மறுபடி பூஜ்ஜியத்திலிருந்து ஆரம்பிப்பது என்று தொடர்ந்து உழைத்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த ஐந்து ஆண்டுகளில் அபுஹாசனும் நிறை மாறியிருந்தார். ஒரு காலத்தில் ஹைக்ளாஸ் அடியாள்போல் துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு திரிந்தவருக்கு இப்போது அரசியல் வட்டாரங்களில் ஏகப்பட்ட செல்வாக்கு. அவர் தான் யாசிர் அராஃபதுக்கு வாரிசு என்றெல்லாம் பேச்சு அடிபட்டது.

பாலஸ்தீன விடுதலை இயக்கங்களில் மட்டுமில்லை, அதற்கு வெளியிலும் அபுஹாசனுக்குப் பல புதிய நண்பர்கள் கிடைத்திருந்தார்கள். அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏ.வுக்கும் பாலஸ்தீனத் தலைவர்களுக்கும் இடையே ஒரு பாலமாக அவர் இயங்கிவருகிறார் என்று வதந்தி.

*1978 ஆம் வருடம்,* அபுஹாஸன் கல்யாணம் செய்துகொண்டார். அவருடைய புது மனைவி ஜார்ஜினா ரிஜ்க். முன்னால் மிஸ் யுனிவார்ஸ்!

ஜார்ஜினாவுடன் ஹனிமூன் சென்ற அபுஹாஸன், விரைவில் பெய்ரூட் திரும்பிவிட்டார். லெபனான் நாட்டுத் தலைநகரமான இந்த ஊர்தான், இப்போது அவருடைய கோட்டை!

பெய்ரூட் அபுஹாஸனுக்கு ஏகப்பட்ட நண்பர்கள் இருந்தார்கள், அதைவிட அதிக எண்ணிக்கையில் நண்பிகள்! கல்யாணமானபிறகும், அபுஹாஸன் தன்னுடைய பழைய ப்ளேபாய் வாழ்க்கையை மறந்துவிடவில்லை. ஒவ்வொரு நாளையும் ஜாலியாக அனுபவிக்க வேண்டும் என்கிற கொள்கையுடன் ஊரைச் சுற்றிக் கொண்டிருந்தார்.

இதைக் கவனித்த அபுஹாஸனின் நண்பர்கள், அவரைக் கடுமையாக எச்சரித்தார்கள். நீங்கள் உங்க இஷ்டம்போல விளையாடுங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை, ஆனால், இப்படி அசட்டையாக இருக்காதீர்கள், அப்பப்போ உங்கள் பயணத் திட்டத்தை மாற்றுங்கள், ஒரே இடத்திற்கு டெய்லி போகாதீர்கள், முன் பின் தெரியாதவர்களிடம் பழகாதீர்கள், மொசாட் இன்னும் உங்களைத் துரத்திக் கொண்டுதான் இருக்கு, அதை மறந்துவிடாதீர்கள்!

அவர்களுடைய அக்கறையான வார்த்தைகளை அபுஹாசன் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை. இந்த ஊரிலே எவனும் என் மேல கைவைக்க முடியாது என்கிற மொட்டை தைரியத்தில் அலட்சியமாக இருந்துவிட்டார்.

அந்தப் பக்கம் இஸ்ரேலின் புதிய பிரதமர் மெனகெம்பெகின் மொசாட்டைக் கூப்பிட்டார், அந்த அபுஹாசன் மேட்டர் என்ன ஆச்சு? அந்தாள் எங்கே இருக்கான் என்று தெரியுமா?

தெரியும் சேர். அப்புறம் ஏன் சும்மா இருக்கீங்க?

இதுபோதுமே அதுவரை காகிதத்தில் கோட்டை கட்டிக் கொண்டிருந்தவர்கள், பெய்ரூட்டுக்கு டிக்கெட் எடுக்கக் கிளம்பினார்கள்.



இந்தமுறை மொசாட் வெறும் கத்தி கபடா துப்பாக்கியை நம்பவில்லை அபுஹாச னின் பலவீனம் எது என்று தெரிந்து அதற்காகவே ஒரு ஸ்பெஷல் ஆயுதத்தைக் கொண்டுவந்தார்கள்.

அந்த ஆயுதம் ஒரு பெண் உளவாளி இந்தத் திட்டத்துக்காக அவருக்குச் சூட்டப்பட்ட கற்பனைப் பெயர். எரிகா சாம்பர்ஸ் இதுவே அவரது உண்மைப் பெயராகவும் இருக்கலாம்!

பிரிட்டனைச் சேர்ந்த எரிகாவுக்கு சமூகப் பணிகளில் ஆர்வம் அதிகம். குறிப்பாக பாலஸ்தீன அகதிகளுக்குச் சேவை செய்வது என்றால் எக்ஸ்ட்ரா பிரியம்.

இதற்காக 1978 ஆம் ஆண்டு இறுதியில் அவர் லெபனானுக்கு அழைக்கப்பட்டார் பெய்ரூட் வந்து சேர்ந்து வீடு எடுத்துத் தங்கிக்கொண்டு சேவை செய்ய ஆரம்பித்தார்.

எரிகா சாம்பர்ஸ் ஒரு மொசாட் உளவாளி என்கிற தகவல் அப்போது யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. எல்லோரும் அவருடன் சகஜமாகப் பழகத் தொடங்கினார்கள்.

அதே நேரத்தில் இன்னும் பல மொசாட் ஏஜென்ட்கள் பெய்ரூட் வந்து சேர்ந்தார்கள். எல்லோருக்கும் வெவ்வேறு பெயர்கள். வெவ்வேறு நாட்டு பாஸ்போட்கள். லில்லிஹாமரில் நிகழ்ந்த தவறை அவர்கள் மறுபடியும் செய்வதாக இல்லை.

பெய்ரூட்டில் எரிகா சாம்பர்ஸ் மற்ற மொசாட் ஏஜென்ட்கள் திரட்டுகிற தகவல்கள் அனைத்தும் மேலிடத்துக்கு அனுப்பட்டன. இதன் அடிப்படையில் அவர்கள் வெவ்வேறு கொலைத் திட்டங்களைத் தயார் செய்து ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தார்கள் எதுவும் சரிப்படவில்லை.

இதற்கு நடுவே மொசாட்டின் ஒரிஜினல் திட்டப்படி எரிகா சாம்பர்ஸ் பாலஸ்தீன விடுதலை இயக்கம் போராளிகள் தலைவர் வட்டாரத்தில் ஊடுருவ ஆரம்பித்திருந்தார். அபுஹாசனையும் நெருங்கி விட்டார்.

சாதாரணமாகவே அபுஹாசன் பெண்கள் விடயத்தில் கொஞ்சம் வீக். இப்படி ஒரு வெளிநாட்டுப் பெண் பாலஸ்தீனர்களுக்கு ஆதரவாகப் பேசுகிறார் என்றதும் அவருக்குச் சுத்தமாகச் சந்தேகமே வரவில்லை.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜபக்ஷக்...

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

ராஜபக்ஷக்களே திட்டமிட்டு தீவிரவாதக் குழுக்களை உருவாக்கி தாம் ஆட்சிக்கு வருவதற்கு வசதியாக ஸ்திரமற்ற பாதுகாப்பு நிலையை உருவாக்கினர்.

இதற்கான சதித்திட்டம் 2013இல் வகுக்கப்பட்டுள்ளது. உளவுத்துறை அமைப்புக்கள் மூலம் சிங்கள, முஸ்லிம் தீவிரவாதக்குழுக்களை உருவாக்கிப் பராமரித்தனர். இதற் உச்ச வடிவமே ஈஸ்டர் தாக்குதல்.

இதன் உச்ச வடிவமே ஈஸ்டர் தாக்குதல், கேம்பிரிட்ஜ் அனலிடிகா சம்பவம், புத்தர் சிலை உடைப்பு கண்டிக் கலவரம் என உருவெடுத்ததாக அமைச்சர் பிமல் சுட்டிக்காட்டினார்.

ஆகவே ஈஸ்டர் தாக்குதலை ஒரு தனிமைப்படுத்தப்பட்ட சம்பவமாக எடுத்துக் கொள்ள முடியாது. 2015 இல் அதிகாரம் இழந்த ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டிய அவசியம் இருந்தது.

எனவே ஒருபுறம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையே அரசியல் பிளவை உருவாக்கி அதன் மூலம் அவர்கள் அரசாங்கத்தை பலவீனப்படுத்தினர் என்றார். (ந-7)






















## விமல் வீரவன்ஸ...

விமல் வீரவன்ஸ தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக வாக்குமூலம் பெறும் பொருட்டு நேற்று அவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இதேவேளை போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் உத்தரவில் 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டதாகவும் அதில் ஆயுதங்கள் இருந்திருக்கலாம் என விமல் வீரவன்ஸ குறித்த ஊடக சந்திப்பில் கூறியிருந்தமை தெரிந்ததே. (ந-7)

## ஆணொருவர்...

அழகரத்தினம் கிறிஸ்டி பால்ராஜ் (வயது-48) என இனங்காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு, உடற் கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ந-7,104)

## கொக்குவிலில்...

கொள்ளப்பட்ட தாக்குதலில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

மேலும் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் உள்ளிட்ட பெறுமதி வாய்ந்த சொத்துக்களுக்கும் சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கற்கள், இரும்புக்கம்பிகள், கூரிய ஆயுதங்கள் உள்ளிட்டவற்றினால் குறித்த மர்மக் கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த மூவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ந-7)

## செம்மணியில்...

மனிதப் புதைகுழி வழக்கின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணி நேற்று (09) 14ஆவது நாளாக இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் இடம்பெற்ற அகழ்வு நடவடிக்கையின்போது, ஏழு என்புத் தொகுதிகள் புதிதாக இனங்காணப்பட்டன.

முதலாம் கட்டம், இரண்டாம் கட்டம் என நேற்றுடன் 23 நாட்கள் இடம்பெற்ற அகழ்வுப் பணியில் இதுவரை 63 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 54 மனித எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

நேற்றைய அகழ்வில் ஒரு சிறுமியின் ஆடை, இறப்பர் செருப்பு மற்றும் பிறபொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இரண்டாம் கட்ட அகழ்வு இன்று (10) தற்காலிகமாக நிறைவடையவுள்ள நிலையில், அகழ்வுப் பணிகள் மீண்டும் விரைவில் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ந-7)

## விசேட பொலிஸ்...

இதுகுறித்து கருத்துரைத்துள்ள அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, யாழ்ப்பாணம் நீதிமன்றில் இடம்பெற்று வரும் செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி வழக்கின் அடுத்த விசாரணை எதிர்வரும் 25ஆம் தகதி இடம் பெறவுள்ளது.

இதன்போது விசேட பொலிஸ் குழுவினர் தமது விசாரணை அறிக்கைகளை நீதிமன்றில் சமர்ப்பிக்கவுள்ளனர்.

அவற்றின் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகளை நீதிமன்றத்துடன் இணைந்து முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

குற்றப்புலனாய்வுத் திணைக்கள விசாரணைகளையும் முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம் என்றார். (ந-7)

## புதுக்...

அமைய புதுக்குடியிருப்புப் பொலிஸார், கிளிநொச்சி குண்டு செயலிழக்கும் பிரிவினர், விசேட அதிரடிப் படையினர், தடயவியல் பொலிஸார் இணைந்து பதுங்கு குழியினுள் இருக்கும் நீரினை அகற்றும் பணி இடம்பெற்று வருகிறது.

துப்புரவுப்பணிகள் நிறைவடைந்து சம்பவ இடத்தினை முல்லைத்தீவு நீதவான் பார்வையிட்டதன் பின்னரே அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந் நிலையில் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர். (ந-7,299)

## பாரியளவான ஆயுதங்கள் மீட்பு

பாரிய அளவிலான ஆயுதங்கள், ஒரு தொகை போதைப்பொருட்கள் என்பவற்றை களனி குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளது.

இரண்டு SMG வகை துப்பாக்கிகள், பத்து 9 மில்லி மீற்றர் தோட்டாக்கள் கொண்ட இரு மகசின்கள், T56 துப்பாக்கி வகை ஆயுத பாகங்கள், 9.24 கிலோ ஹெரோயின் மற்றும் 67.57 கிலோ கேரள கஞ்சா உள்ளிட்டவை அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை 03ஆம் திகதி ராகமையில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 'ஆர்மி உபுல்' என்ற நபர் கொல்லப்பட்டது தொடர்பான மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் நிமித்தமே ஆயுதங்கள் மற்றும் போதைப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-7)






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரபல உணவகமொன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை


- சிட்டை எழுதுனர் இருபாலாரும் (நாள் 1 - 2200)
- மரக்கறி வெட்டுபவர் (நாள் 1 - 2500)
- பார்சல் கட்டுபவர் (நாள் 1 - 2500)
- உணவு பரிமாறுபவர் (நாள் 1 - 2000)
- தேநீர் தயாரிப்பாளர் (நாள் 1 - 2500)
- துப்பரவுப் பணியாளர் (நாள் 1 - 2000)
- சிற்றுண்டி தயாரிப்பவர் (நாள் 1 - 2700)

தொடர்பு 077 907 9888

(4755)


# மரண அறிவித்தல்

தோற்றம் 20 - 07 - 1930



மறைவு 08 - 07 - 2025

## கனகசபை குணரத்தினம்

மஞ்சத்தடி இணுவில் கிழக்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை குணரத்தினம் அவர்கள் கடந்த (08.07.2025) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நாகரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவராசா மற்றும் சுவிஸ் நாட்டை வசிப்பிடமாகக் கொண்டவர்களான இராஜமனோகரி, கலாமதி, காந்திமதி, மனோகரன், கணேஸ்வரன், விக்கினேஸ்வரி மற்றும் சிவாஜினி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் சுவிஸ் நாட்டை வசிப்பிடமாகக் கொண்டவர்களான நித்தியானந்தம், தர்மசீலன், யோகசேனன், கோபாலசிங்கம், விஜயகுமார், வரதலட்சுமி, மேகலா ஆகியோரின் அன்பு மாமனாரும் தர்சினி, நிரோசன், கோபிகா, தர்ஷிகா, சர்வகாந்தசேனை, மதுசன், மதுமிலன், விதுசிகா, தக்ஷா, கார்த்திகா, பவகாந்தசேனன், சாரங்கா, கௌஷிகா, விவேக்கா, யசிக்கா, கயானன், ரவகாந்தசேனை, திவ்வியன் ஆகியோரின் அன்புப் பேரனும் தனிக்கா, தருண், அனீனா, ருத்ரா, டர்னிக்கா, தனோச், துஷி, தனுசா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.07.2025) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல் : குடும்பத்தினர்*
077 089 0684, 079 295 7385

(4753)

# இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் பொலிஸ் அதிகாரியொருவர் கைது

(கொழும்பு)

ராகம வைத்தியசாலையின் நுழைவாயிலுக்கு அருகில் ரூ. 200,000 இலஞ்சம் பெற்ற குற்றத்துக்காக பொலிஸ் அதிகாரி ஒருவர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரின் கூற்றுப்படி, போதைப்பொருள் வைத்திருந்த சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்வதைத் தவிர்ப்பதற்காக, இரு பொலிஸ் அதிகாரிகள் ஒரு நபரிடம் ரூ.200,000 இலஞ்சம் கோரியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஒரு அதிகாரி கைது செய்யப்பட்ட நிலையில், இரண்டாவது சந்தேக நபர் சம்பவ இடத்திலிருந்து தப்பி ஓடியுள்ளார் தப்பியோடிய சந்தேக நபரை கைது செய்ய விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (ந-7)

## ஈஸ்டர்...

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் பல்வேறு விடயங்களை முன்வைத்தார்.

அதில் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலை அப்போது மட்டக்களப்பு சிறையில் இருந்த பிள்ளையான் அறிந்து வைத்திருந்தார் என்பது விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இதேவேளை ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் தற்கொலைக் குண்டுதாரிகளில் ஒருவரான அப்துல் முகமது ஜமீல் தாஜ் சமுத்திரா ஹோட்டலில் குண்டுத் தாக்குதல் நடத்த நியமிக்கப்பட்டார்.

இதற்காக 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 20ஆம் திகதி அவர் தாஜ் சமுத்திரா விடுதியில் தங்கியிருந்தார்.

ஏற்கெனவே பாதுகாப்புக் கண்காணிப்புப் பட்டியலில் இருந்த ஜமீல், தாஜ் சமுத்திரா ஹோட்டலில் தங்கியிருப்பது குறித்து, ஹோட்டல் நிர்வாகம் அரச புலனாய்வு சேவைக்கு மின்னஞ்சல் மூலம் தகவல் தெரிவித்திருந்தது.

எனினும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதே வேளை தாஜ் சமுத்திரா ஹோட்டல் மீது குண்டுத் தாக்குதல் நடத்தும் முயற்சி தோல்வியடைந்தது.

இதனால் அவர் வேறு இடத்துக்கு மாற்றப்பட்டார். தெஹிவளையிலுள்ள ட்ரொப்பிக்கல் தங்குமிடத்தில் நடந்த தாக்குதலில் ஜமீல் இறந்தார் எனவும் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார். (ந-7)


## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் வர்த்தக ஸ்தாபனத்துக்கு றைவர், விற்பனை உதவியாளர் போன்ற வேலைக்கு வேலையாள் தேவை. ஆர்வம் உள்ளவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு உங்கள் சுயவிபரக் கோவையை அனுப்பி வைக்கவும்.

**சுப்பசூஸ்**
**154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

(4750)

## மாப்பிள்ளை தேவை

01. யாழ். இந்து. 1997. கார்த்திகை. MSc, Bio Medical Science, UK citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 53836
02. கொக்குவில். இந்து. 1994. விசாகம். MSc(UK), UK citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 50294
03. வவுனியா - Jaffna Town, இந்து. 1991. MSc(UK). திருவோணம். UK citizen பெண்ணிற்கு (Divorce) மாப்பிள்ளை தேவை. - 50117
04. நெடுந்தீவு - Jaffna, இந்து. 1996. அஸ்வினி. MBBS Doctor, UK citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 47836
05. அளவெட்டி. இந்து. 1998. மகம். Masters in politics, UK citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.-44637
06. புங்குடுதீவு. இந்து 1996. விசாகம். MSc, Uk பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.-39769
07. தம்பசிட்டி. இந்து. 1997. மூலம். Bachelors in law & Business, Uk citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.-42582
08. புன்னாலைக்கட்டுவன். இந்து. 1990. புனர்பூசம். Business and Finance Degree UK, UK citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.-37878
09. மாதகல், இந்து. 1992. ரோகினி, civil Engineering, Phd (US), USA citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 46435
10. மூளாய். இந்து. 1990. சதயம் MSc, USA citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.-32881

எம்மிடம் எல்லா நாட்டிலும், எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு.

S.Sharma J.P | 077 539 3728
www.thaalee.com

(1314)

## மணப்பெண் தேவை

01. இளவாலை. இந்து. 1994. மகம். BSc, Network Engineer, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 53872
02. வண்ணார்பண்ணை. இந்து. 1988. விசாகம். BSc, Network engineer, Uk citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 53784
03. அளவெட்டி. இந்து. 1989. உத்திராடம். MSc, Engineering, Uk citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 53552
04. சண்டிலிப்பாய். இந்து. 1983. ரேவதி. MSc, Senior IT Engineer, Divorce, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 51761
05. ஆனைப்பந்தி. இந்து. 1994. உத்திரட்டாதி. Legal lawyer, Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 31513
06. புலோலி. இந்து. 1985. உத்திராடம். MBA caranfield uk, MSc struct Eng UK, BSc Eng (Hons) civil Eng, LLM London, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 32893
07. வட்டுக்கோட்டை. இந்து. 1988. பூசம். Accounting finance UASW C.P.A.Full Membership, Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 45522
08. கந்தர்மடம். இந்து. 1989. உத்தராடம். BVSC- Peradeniya university, MSc Science in Bio chemistry (memorial) university New Foundland (canada), canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 34257
09. காரைநகர். இந்து. 1988. பரணி. Masters Degree IT, Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. - 46660
10. நல்லூர். இந்து. 1983. கேட்டை. Accounting Degree, canada citizen Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.-44878

எம்மிடம் எல்லா நாட்டிலும், எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு.

S.Sharma J.P | 077 539 3728
www.thaalee.com

(1313)

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3960/- |
| 11-16 Kg | 2790/- |
| 21-27 Kg | 2680/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

UK 11Kg - 1400/- | France 11Kg - 2200/- | Germany 11Kg - 2000/-
Swiss 11Kg - 2470/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2260/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

## பணிப்பெண் தேவை

தங்கிநின்று வீட்டு வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.
இடம் : குரும்பசிட்டி தெல்லிப்பளை

071 82 856 73

(4734)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378
076 097 3127


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.